# மதசாரம்



ஆசிரியர்கள்
த.அருச்சுவன் & சி.துஜியந்தன்
முகிழ்நிலை ஆசிரியர்கள்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
கோப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதசாரம்

ஆசிரியர்கள்

த.அருச்சுவன் & சி.துஜியந்தன்

முகிழ்நிலை ஆசிரியர்கள்,

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,

கோப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


நூலின் பெயர் :- மதசாரம்

நூலாசிரியர்கள் :- செல்வன் த.அருச்சுவன்
செல்வன் சி. துஜியந்தன்



முகவரி :- த.அருச்சுவன்
திருமுருகன் கோவில் வீதி,
சூரியபுரம், களுவாஞ்சிகுடி – 09,
மட்டக்களப்பு.

சி.துஜியந்தன்
6ம் வட்டாரம்,
அனலைதீவு,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல :- 077 1235838
077 5581658



பதிப்புரிமை :- ஆசிரியர்களுக்கே



முதற்பதிப்பு :- 2010, ஆடி

பக்கம் :- VIII + 60

அச்சுப்பதிப்பு :- கஜமுகன் பதிப்பகம்,
384, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 1514

விலை :- 100.00

பிரதிகள் :- 500





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

JAFFNA NATIONAL COLLEGE OF EDUCATION

THOUGHT WORD DEED

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின்

10 ஆவது ஆண்டு நிறைவையொட்டி இந்த

நூலினைக் கல்லூரித் தாய்க்குச்

சமர்ப்பணம் செய்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீடாதிபதியின் ஆசியுரை



எமது கல்லூரியின் பத்தாம் அணி இந்து சமயத்துறை முகிழ் நிலை ஆசிரியர்களான செல்வன். த.அருச்சுவன், செல்வன்.சி.துஜியந்தன் ஆகியோரின் "மதசாரம்" எனும் நூல் வெளியீடு கண்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். கல்லூரியின் பயிற்சிக் காலத்திலே முகிழ் நிலை ஆசிரியர்கள் ஆற்றுகின்ற முகிழ் நிலை ஆசிரியர்கள் ஆற்றுகின்ற ஒரு செயற்றிட்டத்தின் அங்கமாக இதனை எடுத்துக் கொண்டாலும், இவ் இருவரும் ஏற்கெனவே கையெழுத்துச் சஞ்சிகைக் குழுச் செயற்றிட்டத்தை நிறைவு செய்து, இதனை வெளியிட்டு வைக்கும் போது பாராட்டாமல் இருக்க முடியாது.

"மதம் தான் மனிதனை மாட்சிமைப்படுத்துகிறது" என்ற கூற்றுக்கிணங்க, இன்றைய காலத்தில் வாழுகின்ற நாம் மதத்தினை அறிந்து கொண்டால் தான் சீரிய வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம். அதற்கு உதவும் வகையில் நான்கு வகையான மதங்களினையும் அலசி ஆராய்ந்து அதில் பொதிந் திருக்கின்ற நல்ல கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டு இந்நூல் மலர்கின்றது.

இந்நூலின் முகப்பு அட்டையில் காணப்படுகின்ற படத்தினை ஓவியமாக எமது மண்டபச் சுவரில் வண்ணம் தீட்டியுள்ளனர். இவ்விரு ஆசிரிய மாணவர்களும் வெவ்வேறு பிரதேசங்களில் இருந்து வருகை தந்தபோதும், பாரபட்சமின்றி ஒற்றுமையாக எமது மாணவர்கள் செயற்பட்டமைக்கு இவ்விரு மாணவர்களுமே சிறந்த எடுத்துக் காட்டாகும்.

எனவே இவர்களின் திறமையைப் பாராட்டுவதோடு, இவர்களை வழிகாட்டிய இந்து சமய பொறுப்பு விரிவுரையாளர் திருமதி. ஞானசக்தி கணேசநாதன் அவர்களையும் பாராட்டி வாழ்த்து கின்றேன்.

திரு.S.K.யோகநாதன்.
பீடாதிபதி,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உபபீடாதிபதியின் வாழ்த்துரை



இன்றைய நவீன யுகத்தின் வளர்ச்சிக்கேற்ப வருங்கால மாணவ சமுதாயத்தை வழி நடத்தப் போகின்ற ஆசிரியர்கள் தம்மைக் காலத்தின் தேவைக் கேற்ப பல்துறை ஆற்றல்களையுடையவர்களாக மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. அந்த வகையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர்கள் தமது பயிற்சிக் காலத்தில் கற்பித்தலில் வாண்மை விருத்தியை அடைவதுடன் மாத்திரமன்றிப் பல திறன்களையும் வளர்த்துக் கொள்ளும் வகையில் இணைச் செயற்பாடுகளிலும் தம்மை ஈடுபடுத்தித் தகுதி நிலையை உயர்த்துவதில் ஆர்வத்துடன் செயற்பட்டு வருகின்றார்கள்.

அதற்கேற்றவாறு 2009,2010 களில் கற்கும் 10ஆம் அணி இந்து சமயநெறி ஆசிரிய மாணவர்களான செல்வன் சி.துஜியந்தன், செல்வன். த.அருச்சுவன் ஆகிய இருவரும் தமது துறையோடு சம்பந்தப்பட்ட ஆற்றல்களை வளர்ப்பதிலும், அதனைக் கல்லூரியின் நினைவாக நிலை நிறுத்துவதிலும் விருப்புடன் செயற்பட்டுள்ளார்கள். எமது நாட்டு மக்களின் நால்வகை மதங்களை உள்ளடக்கிய குறியீடுகளையும், சின்னங்களையும் காட்சிப்படுத்தும் வகையில் ஓவியமாக வரைந்து தமது ஆற்றல்களை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

எமது கல்லூரி சகல மதங்களுக்கும் மதிப்பளிப்பதில் முன்னிற்பதைப்பின்பற்றி, நால்வகை மதங்களை உள்ளடக்கிய சின்னங்களை இருவரும் ஓவியமாக வரைந்துள்ளமை நன்கு பாராட்டுக்குரியதாகும். அது மட்டுமல்லாது இவர்கள் "மதசாரம்" என்னும் நூலினை வெளியிட்டு மதங்களின் சமரசத்தை உள்ளடக்கிய கருத்துக்களை, வாசித்துப் பயன்பெறும் வகையிலும் வெளிப்படுத்தி உள்ளமை வரவேற்பிற்குரியதாகும்.

இவ்வாறாகத் தமது ஆற்றல்களைப் புதிய புதிய வடிவங்களில் வெளிப்படுத்தியுள்ளமையைப் பாராட்டுவதுடன், இத்தகைய கைங்கரியத்திற்கு ஆர்வமளித்துவரும் இந்துசமய பொறுப்பு விரிவுரையாளர் திருமதி. ஞானசக்தி கணேசநாதன் அவர்களையும் பாராட்டி, எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

திருமதி. ஜெயமலர் தியாகலிங்கம்
உபபீடாதிபதி (கல்வியும் தரமேம்பாடும்),
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமய பொறுப்பு விரிவுரையாளர் வாழ்த்துரை



அனைத்து மதங்களும் மனிதர்களை சமூகத்தில் நற்பிரஜைகள் ஆகவும், ஒற்றுமையாகவும், ஒத்துழைப் போடும், சகவாழ்வுடனும் வாழ்வதற்கான பயிற்சியினையே வழங்குகின்றன. அதனை வலியுறுத்தும் விதமாகவும் ஆசரிய மாணவர்களிடையே அனைத்து மதம் பற்றிய சிந்தனையை உருவாக்குவதோடு, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் பயிலும் இந்து சமயத்துறை மாணவர்களான செல்வன்.சி.துஜியந்தன், செல்வன்.த. அருச்சுவன் என்ற இரு முகிழ்நிலை ஆசிரிய மாணவர்கள் தமது செயற்றிட்டமாக கல்லூரியின் பிரதான மண்டபச் சுவரில் அனைத்து மதங்களினையும் புலப்படுத்தும் ஓவியத்தை வரைவதோடு அம்மதங்கள் பற்றிய கோட்பாடுகள், வழிபாட்டு முறைகள், விரதங்கள், உள்ளடங்கியதாக "மதசாரம்" என்னும் ஒரு சிறு நூலையும் வெளியிடுவதையிட்டு அவர்களை வாழ்த்துவதோடு, இம்மாணவர்களின் நற்செயற்பாட்டைப் பாராட்டி மேலும் இம்மாணவர்கள் உயர்கல்வி பெற்றுச் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றேன்.

திருமதி. ஞானசக்தி கணேசநாதன்.
சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சாரம்





மானுட வாழ்வியலின் ஒவ்வொரு கட்டங்களையும் நகர்த்திச் செல்வதற்குச் சமயம் இன்றியமையாததாகி விட்டதோடு நற்குணங்களை உருவாக்கும் அச்சாணியாக உலகத்தைச் சுற்ற வைக்கிறது.

"சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம் என்பதற்கு ஏற்ப நல்லதொரு களம் எங்களுக்குக் கல்வியியற் கல்லூரியில் அமைந்ததால், இவ்வாறான ஒரு நூலை வெளியிடுவதற்கு எண்ணினோம். எடுத்துக்காட்டாக எல்லாச் சமய மாணவர்களுடனும் பழகுகின்ற சந்தர்ப்பம் கிடைத்ததோடு, காலைப்பிரார்த்தனை கூட அவ்வாறே இடம்பெறுகின்றமை எம்முயற்சிக்கு உரம் இட்டது.

இந்நூலின் ஊடாகச் சமயத்தின் ஆழ அகலங்களைப் பூரணமாக ஆராயாதுபோனாலும் எல்லாச் சமயங்களது கொள்கைகளும் 'நதியானது எவ்வளவு தூரம் ஓடினாலும் இறுதியில் கடலையே சங்கமிக்கின்றது' என்பது போன்ற உயர்ந்த கோட்பாட்டை முன் வைத்துள்ளோம். முக்கியமான கருத்துக்களை எடுத்து "மதசாரம்" என மகுடம் சூட்டியுள்ளோம்.

எமக்குச் சமயத்துறையில் உள்ள அனுபவமும், உள்ளார்ந்த பற்றும், பீடாதிபதியின் ஆலோசனையும், கல்வியியலாளர்களின் வழிகாட்டலும் சேர்ந்து இந்நூலை உருவாக்குகின்ற திறனை பெற்றோம். இதனைச் சமயநூல் என்பதை விடச் "சமூக நூல்" என்று கொள்ள முடியும். ஏனெனில் எல்லாச் சமூகங்கள் பற்றிய கருத்துக்களும் இந்நூலில் இழையோடப்பட்டுள்ளமை மற்றுமோர் சிறப்பாக இருக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

இந்நூல் உருவாகுவதற்குத் தோளோடு தோள்நின்று உழைத்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது இதயபூர்வமான அன்பினையும், நன்றியினையும் தெரிவித்துக் கொள்கின்றோம். அதேவேளை, எமது கன்னி முயற்சியின் நிறைவினில் திருப்திப் படுவதோடு குறைகளைச் சுட்டிக்காட்டுவது எமது வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக அமையும். இந்நூலை அனைவரும் கற்று வளம்பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**செல்வன் த. அருச்சுவன்.**
**செல்வன் சி. துஜியந்தன்.**
**முகிழ்நிலை ஆசிரியர்கள்,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,**
**கோப்பாய்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே........


| | | |
|---|---|---|
| 1. | மதசாரம் ஓர் அறிமுகம் | 01 |
| 2. | இந்துமதசாரம் | |
| | I. தோற்றமும் வளர்ச்சியும் | |
| | II. வழிபாட்டு முறைகள் | |
| | III. பண்டிகைகளும் விரதங்களும் | |
| | IV. அடிப்படைக்கோட்பாடுகள் | |
| | V. மூல நூல்கள் | 02 - 17 |
| 3. | கிறிஸ்தவ மதசாரம் | |
| | I. தோற்றமும் வளர்ச்சியும் | |
| | II. வழிபாட்டு முறைகள் | |
| | III. பெருவிழாக்களும் விரதங்களும் | |
| | IV. அடிப்படைக்கோட்பாடுகள் | |
| | V. மூல நூல்கள் | 18 - 31 |
| 4. | இஸ்லாமிய மதசாரம் | |
| | I. தோற்றமும் வளர்ச்சியும் | |
| | II. அடிப்படை வழிபாட்டுக் கடமைகள் | |
| | III. சடங்குகளும் விழாக்களும் | |
| | IV. அடிப்படைக்கோட்பாடுகள் (ஏகத்துவம்) | |
| | V. மூல நூல்கள் | 32 - 47 |
| 5. | பௌத்தமத சாரம் | |
| | I. தோற்றமும் வளர்ச்சியும் | |
| | II. வழிபாட்டு முறைகள் | |
| | III. தினங்களும் விழாக்களும் | |
| | IV. அடிப்படைக்கோட்பாடுகள் | |
| | V. மூல நூல்கள் | 48 - 58 |
| 6) | மதம்சார் சிந்தனைத்துளிகள் | 59 |
| 7) | உசாத்துணை நூல்கள் | 60 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதசாரம் ஓர் அறிமுகம்

மதம் என்னும் போது சமயம் என்றுபொருள் கொள்ளப்படுகின்றது. வாழ்வியல் நெறி எனக்கொண்டு மனிதனைப் புடம்போட்டு நெறிப்படுத்துவதில் மதம் அதி உச்ச பங்கினை வகிக்கின்றது.

பலவாறான மதங்கள் காணப்பட்ட போதும் எல்லோரையும் வழிநடத்துகின்ற இறைவன் ஒருவனாகவே காணப்படுகின்றான். தாம் ஒரு சமயத்தைப் பின்பற்றி, எமது என்று சிலர் சொல்லிக் கொண்டிருந்தாலும், அதனது கொள்கைகள், கோட்பாடுகள், ஒழுக்க விதிகளைப் பின்பற்றாமல் கருத்துக் கூறுவனவாக இருந்தால் வெறுமனே அவற்றை அவர்களது புலம்பல்களாகவே சமூகம் தட்டிக்கழிக்கும்.

**சமூகமும் சமயமும் அன்றிலிருந்து இன்றுவரை பிரிக்க முடியாத ஒன்றாகவே இருந்து வருகின்றது. மனிதனுக்குக் தேவையானதும் சமூகத்தில் அவனை வளர்த்து வருவதுமான, அன்பு, அகிம்சை, இரக்கம், பெரியோரைக் கனம் பண்ணுதல், விருந்தோம்பல் போன்ற இனிய பண்புகளையே மதங்கள் எடுத்தியம்புகின்றன.**

**குயவன் வேறு வேறு பாத்திரங்களை ஒவ்வொருவரது விருப்பிற்கேற்ப உருவாக்கினாலும் மண்ணே அடிப்படையாவது போல், எல்லா மதங்களும் வேறு வேறான கலாசாரத்தைப் பிரதிபலித்தாலும் கூட சமூகத்தில் நல்ல மனிதனது உருவாக்கத்தையே இவை எதிர்பார்க்கின்றன.**

நல்லவர்களாக வாழ்ந்தவர்களது வரலாற்றினைப் பார்ப்போமாக இருந்தால், அவர்கள் ஏதோ ஒரு சமயத்தின்பால் ஈர்க்கப்பட்டதோடு அதன் சமூகவாழ்வின் பின்னணியில் வாழ்ந்தவர்களாகவே இருப்பார்கள்.

அவ்வாறாக நாமும் நான்கு சமயத்தையும் அவற்றின் கோட்பாடுகளையும், கொள்கைகளையும் கற்பதன் மூலம் மேற்கூறிய சமூக விடயங்களைச் சிறப்பாக அறிந்துகொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மதசாரம்



இலங்கையில் தொன்றுதொட்டு வழக்கில் காணப்பட்ட மதமாக இந்து மதம் காணப்படுகின்றது. இம் மதத்தை தோற்றுவித்தவர்கள் என்று யாருமில்லை. இம்மதம் பழமையானது. இதனால் இம்மதத்திற்கு ஆதியும் அந்தமும் கிடையாது. இதனால் இம்மதத்தவர் சிவனை முழுமுதற் கடவுளாக கொள்கின்றனர். இதில் பலபிரிவுகள் காணப்படுகின்றன. இம்மதத்தின் மூல நூல்களாக வேதம், ஆகமம், இதிகாசம், புராணம், பிரஷ்தான திரயம், ஆகியன கொள்ளப்படுகின்றது. இம்மதத்தவர் வழிபடும் இடத்தை கோயில், ஆலயம் என்று பல பெயர் கொண்டு அழைப்பர். எனவே இவ்வாறு விளங்கும் இந்து மதத்தின் தோற்றமும் வளர்ச்சியும், வழிபாட்டு முறைகள், விரதங்களும், பண்டிகைகளும், அடிப்படை கோட்பாடுகள், மூல நூல்கள் ஆகியன தொடர்பாக ஆராய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோற்றமும் வளர்ச்சியும்

இந்துமதத்தின் தோற்றம் பற்றி நோக்குவதற்கு மற்றைய மதங்களைப் போல் ஸ்தாபித்த ஒருவரைக் குறிப்பிட்டுக் கூறமுடியாது. இது மிகவும் பழைமையான மதமாகும். இச்சமயம் எப்போது தோன்றியது என எவராலும் கூறமுடியாது. இதில் போதனைகளுக்குப் பொறுப்பாகக் குருமார்களோ, சங்கங்களோ, சபைகளோ இல்லை. இருந்தும் பல கடவுளர்களும், பல சடங்கு முறைகளும் காணப்படுகின்றன.

இந்துநதிப் பள்ளத்தாக்கில் வாழ்ந்த புராதன காலப் பாரசீகர்கள் அழைத்த சொல்லைக் கொண்டே இந்தியா என அழைக்கப்பட்டு, அங்கு வாழ்ந்தவர் அனைவரும் இந்துக்கள் என அழைக்கப்பட்டனர். எனவே இந்துசமயம் என்ற சொல்லுக்கு அடிப்படைக் கருத்தை நோக்குகையில், அது இந்தியர்களின் நம்பிக்கைகள் அல்லது சமயம் எனப் பொருள்படுகின்றது. இதன் வளர்ச்சி பற்றி நோக்குகையில் சிந்துவெளிக் காலத்தில் இருந்தே நோக்க முடிகின்றது. அதாவது கி.மு 3000 ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில் மொகஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய இடங்களில் விளங்கிய இந்துநதிக் கலாசார மக்களிடையே இந்துசமய வழிபாடு நிலவியது. இதற்கு புதைபொருள் ஆய்வுச் சான்றுகள் ஐதீகத்தின் அடிப்படையில் விளக்கி நிற்கின்றன. இவ்வாறு புராதன வைதீக சமயம், மக்களின் சமய நம்பிக்கைகள், அனுட்டானங்கள் என்பவற்றாலும் வளர்ச்சியடைந்ததே நவீன இந்துசமயம் எனக்கொள்ளப்படுகின்றது.

இச்சமயம் வளர்ச்சியடைந்து செல்லும்போது மக்கள் பல தெய்வங்களை விருப்பத்திற்கு ஏற்ப வழிபட்டனர். இவ்வாறாக ஆதிகால மக்கள் பயத்தின் அடிப்படையிலும், வேண்டுதல், நன்றிக்கடன் அடிப்படையிலும் பல தெய்வங்களை வழிபட்டனர். மொத்தமாக 33 தெய்வங்களாக அறிவில் முன்னேறிய சமூகத்தவர் கடவுளர்களை விண், மண், இடை என்னும் மூவுலக அடிப்படையில் தலா பதினொன்று எனப் பிரித்து வழிபட்டனர். பிற்காலத்தில் மேலும் இலகுவாக்க, அறுவகைச் சமயமாக, அனைத்துத் தெய்வங்களையும் ஆறு பெரும் பிரிவுகளில் அடக்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபட்டனர். இவ் அறுவகைச் சமயங்கள் சண்மதங்கள் எனக் கொள்ளப்படுகின்றது. அதாவது சிவனை முழுமுதற் கடவுளாகக் கொள்பவர்களுடைய சமயம் சைவம் எனவும், விஷ்ணுவை இறைவனாகக் கொள்பவர்களின் சமயம் வைணவம் என்றும், பெண் தெய்வங்களைச் சக்தி என உருவகித்து வழங்கும் பிரிவினை சாக்தம் என்றும், கணபதியை வழிபடும் சமயத்தவரைக் காணபத்யம் எனவும், முருகனை வழிபடுவோர் கௌமாரம் எனும் பிரிவிலும், சூரியனை வழிபடும் பிரிவினரை சௌரம் எனவும் பிரித்துத் தமது விருப்பத்திற்கேற்ப இதில் ஒரு பிரிவைப் பின்பற்றி இந்தியாவில் உள்ள இந்து மதத்தவர்கள் வழிபட்ட போதும், இலங்கையில் சைவ சமயத்தை சிறப்பாக வழிபடுவதனால் இவ் அறுவகைச் சமயப் பிரிவுகளும் இதனுள் உள்வாங்கப்பட்டு இலங்கையில் உள்ள இந்து சமயத் துறையினருக்குச் சைவநெறி என்ற அடிப்படையிலே கற்பிக்கப்படுவதும் நோக்கத்தக்கதாகும்.

இவ் இந்து மதத்தினைச் சைவ நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும். சந்தான குரவர்களும், தொகை அடியார்களும் வளர்த்தனர். பல்வேறுபட்ட இந்துசமய இலக்கியங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இந்து மதம் வீழ்ச்சிக்குள்ளான போது அவைதீக மதம் தலைதூக்கியது. இதனைத் தடுத்து நிறுத்திய பெருமை இவர்களையே சாரும். சங்க காலத்திலே இயற்கையோடு சேர்ந்த வழிபாடாகவும், சங்கமருவிய காலத்திலே அறக்கருத்துக்களோடு இணைந்தும், பல்லவர் காலத்தில் பக்தி இயக்கம் ஊடாகவும், சோழர் காலத்தில் அரசர்களின் பணிகளின் ஊடாகவும், பின்வந்த நாயக்கர் காலத்தில் மடங்கள், ஆதினங்கள் ஊடாகவும், ஐரோப்பியர் காலத்தில் இந்துமத நூல்கள் அச்சேற்றப்பட்டும் சைவ சமயம் சிறப்புற வளர்ந்து தற்காலத்தில் சிறப்பாகக் காணப்படுகிறது.

இதனை அடுத்து இராஜாராம் மோகன்ராய், தயானந்த சரஸ்வதி போன்றவர்கள் இந்தியாவில் இருந்த மக்களுக்கு 'பால்யதிருமணம், உடன்கட்டை ஏறுதல் போன்ற மூட நம்பிக்கைகளைக் களைந்து சமய விடயங்களிலும் சரி கல்வி விடயங்களிலும் சரி, சமூகத்திலும் சரி, பெண்கள் ஈடுபடலாம்.'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப் போதனைகள் செய்து வந்தனர். இதனால் பெண்கள் சமயத்தில் விருப்பம் கொண்டு ஆண்களுக்குத் துணையாக செயற்பட்டுச் இந்து சமயத்தை வளர்த்தனர். இது தற்காலத்திலும் வளர்ச்சியடைவதோடு இலங்கையிலும் மேன்மை கண்டு வருகிறது. இதைப் போன்று இலங்கையிலும் இந்துமதம் வளர்ச்சியடைந்து வருகின்றது.

## வழிபாட்டு முறைகள்

இம் மதத்தில் உள்ள வழிபாடுகள் பொதுவாக ஆகம வழிபாடு, ஆகமம் சாரா வழிபாடு என இருவகையாகப் பிரித்து நோக்கப்படுகின்றது. இதில் ஆகம வழிபாட்டை நோக்கும் போது அதற்குள் பல வழிபாட்டு முறைகள் காணப்படுகின்றன. இந்த வகையில் ஆகம விதிப்படி அமைக்கப்பட்ட ஆலயங்களில் மேற்கொள்ளப்படும் வழிபாடுகள் உருவ வழிபாடு, தீப வழிபாடு அர்ச்சனை வழிபாடு, தோத்திர வழிபாடு, அபிஷேக வழிபாடு, யந்திர வழிபாடு, கோபுர வழிபாடு போன்றன இடம்பெறுகின்றன. இதனைப் போன்று ஆகமம் சாரா வழிபாடு எனும் கருத்தை நோக்க வேண்டியுள்ளது. அதாவது ஆகம விதிகளில் கூறப்பட்டுள்ள விடயங்களுக்குட்படாது மேற்கொள்ளப்படும் வழிபாடுகள் அனைத்தும் இதனுள் அடங்குகின்றன. அந்த வகையில் கிராமிய வழிபாடுகள், ஆகம விதிகளுக்கு அமைவாக அமைக்கப்படாத ஆலயங்களில் மேற்கொள்ளப்படும் வழிபாடுகள், மரங்கள், ஆற்றங்கரை, அரசமரம், நாற்சந்திகள், வீடுகள் போன்றவற்றில் மக்கள் நம்பிக்கையின் அடிப்படையில் விரும்பியவாறு மடை வைத்தல், பலியிடுதல், கலையாடுதல், காவடி எடுத்தல், சிதறு தேங்காய் உடைத்தல், தீ மிதித்தல் போன்ற அனைத்தும் இதனுள் அடங்குகின்றன.

இவ்வாறு இரு பிரிவுகளின் அடிப்படையில் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டாலும் தற்காலத்தில் ஆகம வழிபாட்டில் ஆகமம் சாரா வழிபாடுகளும், ஆகமம் சாரா வழிபாட்டில் ஆகம வழிபாடுகளும் கலந்து வழிபாட்டு முறைகள் வளர்ச்சியடைந்து வருகின்றன. அந்தவகையில் சில முக்கிய தெய்வங்களின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாடுகள் பற்றி நோக்கும் பொழுது விநாயகருக்குச் சிதறு தேங்காய் உடைத்தல், தோப்புக் கரணம் போடுதல், மஞ்சள், சாணம், சந்தனம் போன்றவற்றில் விநாயகர் பிடித்து அறுகம்புல் சாற்றி, அவல், கடலை, மோதகம் , சுண்டல், அரிசிக்கொழுக்கட்டை போன்றவற்றைப் படைத்து வழிபடப்படுகின்றது. அடுத்து சைவத்தின் இறைவனாகிய சிவ வழிபாடு பற்றி நோக்குகையில் மூர்த்தி வழிபாடு, வில்வ அர்ச்சனை, சிவலிங்க பூசை, தோத்திர வழிபாடு, சிவசின்ன வழிபாடு, ஆறுகாலப் பூசை ஆகியவையும் சக்தி வழிபாட்டில் மந்திர, தந்திர, யந்திர வழிபாடுகள் முக்கியமாகக் காணப்படுவதோடு தீச்சட்டி எடுத்தல், கலையாடுதல், தீமிதித்தல், பலிகொடுத்தல், குங்கும அர்ச்சனை போன்ற வழிபாடுகளும், முருக வழிபாட்டினுள் காவடி எடுத்தல், கரகாட்டம், நேர்த்தி யாத்திரை போன்ற வழிபாடுகளும், விஷ்ணு வழிபாட்டில் திருமண் சார்த்தல், தசாவதார வழிபாடு ஆகியனவும், சூரிய வழிபாட்டில் பொங்கல் படைத்தல், சூரிய நமஸ்கார வழிபாடு, நேர்த்தி வழிபாடு ஆகியனவும் வைரவருக்கு வடை மாலை சாற்றி மடை பரவுதல், மதுப்பொலி வழங்கல் போன்றனவும், ஆஞ்சநேயருக்கு வெற்றிலை மாலை சாற்றி வழிபடுதல் ஆகியனவும், நாக வழிபாட்டில் பால், பழம், பொங்கல், தோச நிவர்த்தி ஆகியனவும், சனீஸ்வரருக்கு எள்ளெண்ணை எரித்தல் வழிபாடும் இடம்பெறுகிறது. இவ்வாறு இந்து மதத்தவர்களாலே தமது விருப்பத்திற்கு ஏற்ப வழிபாடுகள் செய்யப்பட்டாலும், தெய்வங்களைப் பொறுத்து வழிபாடுகளில் ஓரிரு மாற்றங்களும் காணப்படுகின்றன.

இருப்பினும் ஆலயங்களில் இடம்பெறும் மகோற்சவ வழிபாடு, புனருத்தாரண வழிபாடு, விசேட தின வழிபாடுகள், நேர்த்தி, விரத, நித்திய, நைமித்திய, காமிய, நிஷ்காமிய வழிபாடுகள் போன்ற வழிபாட்டு முறைகள் காணப்படுவது போல், மனிதர்களுக்கிடையிலும் வழிபாட்டு முறைகள் வேறுபட்டுக் காணப்படுகின்றன. அதாவது, ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும், இருபாலாரும் மேற்கொள்ளும் வழிபாடாக ஏகாங்கம், துவியாங்கம், சங்கம திரியாங்கம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலயாத்திரை, குருலிங்க வழிபாடு ஆகிய வழிபாட்டு முறைகளும் சிறந்து விளங்குகின்றன. இவ்வாறு இந்து மத வழிபாட்டு முறைகள் விரிந்து கொண்டே செல்கின்றன.

**பண்டிகைகளும், விரதங்களும்.**

இந்து சமயத்தில் காணப்படும் பண்டிகைகளும், விரதங்களும் இந்துக்களின் வாழ்க்கையில் மிகவும் செல்வாக்குச் செலுத்துகின்றன. இதில் பண்டிகைகளினால் சமூக உறவு வளர்வதுடன் ஒற்றுமை, அன்பு, கலாசார விடயங்கள் போன்றன வளர்க்கப்படுவதுடன், வெளிக்கொணரவும்படுகிறது. அவ்வாறே விரதங்களை அனுட்டிப்பதனால் பக்தி, அடக்கம், பொறுமை, விருந்தோம்பல் நுண்கலைகள் போன்ற நடவடிக்கைகள் வளர்க்கப்படுகின்றன. எனவே இவை பற்றி தனியாக நோக்குதல் சிறப்பாக அமையும்.

**அ. பண்டிகைகள்**

எல்லாச் சமயங்களுக்கும் பண்டிகைகள் ஒரு பொதுப் பண்பாகவே காணப்படுகின்றன. சமயச் செயற்பாடுகளில் பங்கு பற்றக்கூடிய வகையில் பொதுமக்களைக் கவர்வதற்கு இவ்வாறான பண்டிகைகள் துணை நிற்கின்றன. அந்த வகையில் இந்து சமயத்திற்குரிய விழாக்களாக பண்டிகைகள் அமைகின்றன. அதில் மிகவும் முக்கியமானவையாகத் தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, ஆடிப்பிறப்பு, தீபாவளி ஆகியன கொள்ளப்படுகின்றன.

**1. தைப்பொங்கல்**

உலகத்திலே மாரி உண்டாவது சூரியனால் பயிர் விளைவது மாரியினால் எனவே எமக்குத் தேவையான அனைத்தையும் கொடுப்பது சூரிய பகவானாவான். இதனால் எமது சீவியத்துக்குத் தேவையான உணவுப் பொருட்களை விளைவித்துக் கொடுத்த சூரியனுக்கு நன்றிக்கடன் செலுத்த தை முதல் நாள் பூரண கும்பம் வைத்து, வரவேற்று, புதிதாக அறுவடை செய்கின்ற அரிசியில் சூரியன் உதயமாகும் நேரத்தில் பாற்பொங்கல் பொங்கிப் படைத்து நன்றிக்கடன் செய்யப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தை மாதம் முதல் ஆனிமாதம் வரை சூரியன் வடக்கு நோக்கி செல்வதை உத்தராயண காலம் என்பர். தைமாதம் முதலாந் திகதி சூரியன் தனுராசியிலிருந்து மகரராசிக்கு மாறிச் செல்லும் காலத்தில் தொடங்குகின்றது. தை மாத முதலாந் திகதி பெரும்பாலும் ஜனவரி மாதம் 13, 14 ஆக அமைகின்றது.

2. சித்திரை வருடப்பிறப்பு

இது சித்திரை மாதம் முதலாந் திகதி கொண்டாடப் படுகிறது. அதாவது, சூரிய பகவான் மேட இராசிக்குள் பிரவேசிக்கும் காலமாக அமைகிறது. எமது தமிழ் வருடங்கள் 60 உண்டு. இதில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பெயர் கொண்டு மழை, காற்று, பயிர் வளம் போன்ற இயற்கைக் கால பலாபலன்களை மாற்றியமைக்கின்றது. புது வருடம் பிறக்கும் நாளைப் பிரம்மா உலகப் படைப்பை ஆரம்பித்த காலமென்று புராணத்தில் ஒரு ஐதீகம் உண்டு. இதனால் தான் இது புதுவருடப்பிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. எனவே இந்நாளில் எம்மவர்கள் தங்களுடைய பாவங்கள், தோசங்கள் நீங்க வேண்டி ஆலயங்களில் அல்லது அர்ச்சகர் இல்லங்களில் மருந்து வகை, பூவகை, வாசனைத் திரவிய வகை போன்ற பல தெய்வீக அம்சம் பொருந்திய பொருட்களைப் போட்டுக் காச்சிய மருத்து நீரை தலையில் தேய்த்து, ஸ்நானம் செய்து, உலகில் கண்கண்ட தெய்வமாக மிளிரும் சூரிய பகவானுக்கு வீடுகளில் பொங்கலிட்டு, பூஜைசெய்து , புத்தாடை அணிந்து, ஆலய வழிபாடு செய்து, குரு, பெரியோர்கள், பெற்றோர்கள் போன்றவர்களிடம் ஆசிகள் பெற்று, கைவிசேஷம் பெற்று, அறுசுவை உணவுகளை உண்டு மங்கலகரமான இந்நாளில் மனதில் மகிழ்ச்சி ஏற்படும் வண்ணம் நடந்து கொண்டால் அந்த வருட நாட்கள் அனைத்தும் மகிழ்ச்சியாக அமையும் என்பது எம்மவர்களின் நம்பிக்கையாகும்.

சித்திரை மாதத்துடன் இளவேனிற் காலம் ஆரம்பிக் கின்றது. இங்கு சூரியன் மேட இராசிக்குச் செல்கின்றான். இதனால் தான் இக்காலத்தை தமிழ் வருடம் பிறக்கும் காலம் என்கின்றனர். அத்துடன் சிங்கள மக்களுக்கும் இக் காலத்திலேயே வருடம் பிறக்கின்றது எனக்கொள்வர். இதனால் தான் சித்திரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடப்பிறப்பை தமிழ் - சிங்களப் புத்தாண்டு எனக் குறிப்பிடு கின்றனர். இவ்வேளையில் வட திசையில் செல்லும் சூரியன் மதுரை மீனாட்சியம்மன் மூலஸ்தானத்தில் கடப்பது சிறப்புக்குரியது. வருடத்தில் உள்ள பன்னிரண்டு மாதங்களும் சுற்றுகையில் மேடம் முதல் மீனம் ஈறாக பன்னிரண்டு இராசிகளிலும் சஞ்சரிக்கும், கிரகங்களின் நடு நாயகனான சூரிய பகவான் ஒவ்வொரு வருடமும் சித்திரை முதலாந் திகதி இறுதி இராசியான மீன இராசியில் இருந்து முதல் இராசியான மேட இராசிக்கு பிரவேசிக்கின்றான். இவ்வாறு சிறப்பாக விளங்கும் சித்திரை வருடப்பிறப்பு தமிழர்களாலும், சிங்களவர்களாலும் புதுவருடப் பிறப்பாக கொண்டாடுவதால் இப்பண்டிகை சிறப்பிற்குரியதாக அமைகின்றது.

3. ஆடிப்பிறப்பு

"ஆடிபிறக்கும் பொழுது மாரியும் பிறக்கிறது" என எமது மூதாதையர்கள் நம்பினார்கள். இதனாலே எமது சீவியத்திற்குத் தேவையான விளைபொருட்களை விளைவிப்பதற்கு மாரி முக்கியமானதால் இவ் ஆடிப்பிறப்பை நாம் கொண்டாடி, மாரி காலத்தை வரவேற்கின்றோம். இவ் ஆடி மாதத்தில் தான் எமக்குத் தேவையான விளைபொருட்கள் வித்திடப்படுகின்றது. இதன் காரணமாக ஆடிப்பிறப்பு ஒரு முக்கியத்துவம் பெற்ற பண்டிகையாக எம்மிடையே கொண்டாடப்படுகின்றது. இந்நாளில் வீட்டில் உள்ள எல்லோரும் இணைந்து கூழ் காய்ச்சி கொழுக்கட்டை போன்ற உணவுத் தின்பண்டங்களைச் செய்து கூடியுண்டு மகிழ்ந்து இவ்வாறு ஆடிப்பிறப்பு கொண்டாடப் படுகிறது.

4. தீபாவளி

ஐப்பசி மாதம் கிருஷ்ணபட்ச சதுர்த்தசி தினமே தீபாவளி எனப்படும். இது அமாவாசைக்கு முதல் நாளாகிய சதுர்த்தசி பொருந்திய அதிகாலை நேரமாகும். இக் காலத்தில் வீடுவாசல்கள் அக்கம் பக்கம் போன்ற எல்லா இடங்களிலும் தீபங்கள் ஏற்றப்படுவதால் தீபாவளி என அழைக்கப்படுகின்றது எனச் சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார் கூறுகின்றார். எனவே தீபாவளியைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபவரிசை என்றும் கூறுவர். இதனைக் கொண்டாடக் காரணமாகச் சிறுகதை ஒன்று கூறப்படுகிறது. அதாவது நரகாசூரனால் மக்களுக்குப் பல இன்னல்கள் இழைக்கப்பட்டு ஆலயங்கள் அடைக்கப்பட்டுக்கிடந்தன. இதனால் வையகம் எங்கும் துன்பச்சுமை சூழ்ந்திருந்தது. எனவே காத்தல் கடவுளாகிய விஸ்ணு, கிருஷ்ணர் அவதாரம் எடுத்த இக்காலத்தில் நரகாசூரனை வதம் செய்தார். இதனால் தீமை அழிக்கப்பட்டு நன்மை மேலோங்கியது. அவ்வேளை இறக்கும் தறுவாயில் இருந்த நரகாசூரன், கிருஸ்ணபகவானிடம் நான் இறக்கும் இத்தினத்தில் தங்களை வழிபடுவோருக்கு அருள் புரிய வேண்டும் என்று வரம் பெற்றான். இதனால் தான் அன்றைய தினம் காலையில் ஸ்நானம் செய்து கோயிலுக்குச் சென்று, தரிசனம் செய்து, புண்ணியச் செயல்கள் செய்ய வேண்டும். அதிலும் உபவாச விரதம் அனுஷ்டித்தால் மிகவும் உத்தமம். எனவே இந்த நாள் ஆன்மாக்கள் நரக வழிகளில் நின்று நீக்கப்படும் நற்பாக்கிய நிலையைக் குறிக்கும் நாளாகும்: எனவே இந்நாளில் பாவ நிலைகளில் இருந்து நீங்கி இருத்தல் அனைவரினதும் கடமையாகும். அது மாத்திரமன்றி இந்நாளில் உபவாசம் இருந்து, விஸ்ணு நாமம் செபித்து, விஷ்ணு தரிசனம் செய்வோருக்கு வைகுண்ட மோட்சம் கிடைக்கும் என்று புராணங்களில் சொல்லப்படுகின்றது. இதைப் புரியாத இந்துக்கள் தீபாவளி நாளில் உயிர்ப்பலி செய்து, பூஜித்து, மது அருந்திப் பல பாவங்களையும் மேற்கொள்வது அறியாமை ஆகும். எனவே இனிவரும் நாட்களிலாவது இந்துக்கள் இப்படியான பாவச்செயல்களை விடுத்து நற்செயல்கள் புரிந்து நற்கதியைப் பெற முயல வேண்டும்.

5. ஏனைய பண்டிகைகள்

இச்சிறப்பு வாய்ந்த நான்கு பண்டிகைகளையும் தவிர்த்து போகிப் பண்டிகை, ஓணம் பண்டிகை, பட்டிப் பொங்கல், கார்த்திகை விளக்கீடு போன்ற சிறு சிறு பண்டிகைகளையும் இந்துக்கள் கொண்டாடி வருகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆ. விரதங்கள்

எமக்கு எல்லா நலன்களையும் தரும் இறைவனை மறவாது வாழ்த்தியும், வணங்கியும் இருத்தல் எமது முக்கிய கடமை ஆகும். எனினும் உலகியற் சூழல்களால் இக்கடமையைத் தினமும் செய்ய முடியாதிருப்பதால் குறிப்பிட்ட சில நாட்களிலேனும் நாம் இக் கடமையைச் செய்தல் வேண்டும். இது ஆன்மா ஈடேற்றம் தரும் சாதனையாகவும் கொள்ளப் படுகின்றது. இவ்விரதம், தவம், நோன்பு, உபவாசம் என பல பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது. இவ்விரதம் அனுட்டிப்பதனால் மனம், புத்தி, சித்தம் முதலிய உட்கருவிகள் தூய்மை அடைகின்றன. இதனால் நல்லறிவு ஞானம் கைகூடுகின்றது. இவ்வாறு பல சிறப்புக்களைத் தரும் விரதத்தினை எவ்வாறு கடைப்பிடிக்க வேண்டும் என விரதம் எனும் வரைவிலக்கணத்தில் ஆறுமுக நாவலர் பின்வருமாறு கூறியுள்ளார். 'மனம், பொறி, வழிபோகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும், சுருக்கியேனும், மனம், வாக்கு, காயம் எனும் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு வழிபடுதல் விரதமாகும்.'

இவ்வாறு ஐம்புல அடக்கத்தை ஏற்படுத்தும் விரதத்தை அனுட்டிப்பவர்கள் பிற்காலத்தில் தாம்பூலம் தரித்தல், புகை பிடித்தல், சிற்றின்பம் துய்தல், பகல் நித்திரை செய்தல் முதலான பிராயச்சித்தமற்ற பாவதண்டனைகளுக்கு உள்ளாகும் தவறுகளைச் செய்யக்கூடாது. அதேபோல் விரத காலத்தில் உணவு உட்கொள்வதிலும் யாசிதம், பாதக் கிரிச்சனம், பன்னக் கிரிச்சனம், பிரசாபத்திய கிரிச்சனம், பார்க்க கிரிச்சனம், சாந்தாபன கிரிச்சனம், மகாசாந்தாபன கிரிச்சனம், சாந்திராயணம், வால சாத்திராயணம், சௌமியக்கிரிச்சனம், அதிகரிச்சனம், கிருச்சனாதி கிரிச்சனம் போன்ற முறைகளில் ஏதாவது ஒன்றை சரியாகக் கடைப்பிடித்து ஒழுக வேண்டும். அவ்வாறு ஒழுகுவதன் மூலம் எம் மனித வாழ்வு மேன்மையுற்று, நன்மைக்கு எம்மை இட்டுச் செல்லும். எனவே இவ்வாறான விரதங்களில் மிகவும் சிறப்பான விரதங்களை தெய்வங்களின் அடிப்படையில் நோக்குவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. சிவ விரதங்கள்

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவர்கள் அஃவரது அருளினைப் பெற்றுக்கொள்ளும் வகையில் பல்வேறு பட்ட வகையில் விரதங்களை அனுஷ்டிக்கின்றனர். அவ் விரதங்களாவன மகாசிவராத்திரி, மாசிமகம், பங்குனி உத்தரம், சித்திரைத் திருவோணம், ஆனி உத்தரம், ஆவணிச் சதுர்த்தி, ஆவணி மூலம், புரட்டாதிப் பூர்வபக்க சதுர்த்தசி, சோமவாரம், திருவாதிரை, பிரதோஷ விரதம், திருவெம்பாவை ஆகியனவாகும். சிறப்பாக அனுட்டிக்கப்படுகின்ற சிவராத்திரி விரதம் பற்றி விரிவாகப் பார்ப்போம்.

### மகாசிவராத்திரி

மாசிமாத கிருஷ்ணபட்ச சதுர்த்தசி தேய்பிறை 14ஆம் நாள் சிவராத்திரி ஆகும். ஒடுங்கிய உலகத்தை மீளத் தோற்றுவித்தற்காக இறைவன் சோதி வடிவான இலிங்கமாய் நின்று லலிதாதேவி எனும் பெயரோடு சக்தியைத் தோற்றுவிக்க, அத்தேவி இலிங்கபிரானை வணங்க, அவர் இலிங்கோற்பவராகத் தோன்றி உலகின் மறு தோற்றத்திற்குப் பிரமா முதலியோரைப் படைத்து சிருஷ்டித் தொழிலை ஆரம்பித்தார். அவ்வாறு நிகழ்ந்த காலத்தில் பிரமனும், விஷ்ணுவும் தங்களுள் யார் பெரியவர் என வாதம் செய்யவே, அவர்கள் மத்தியில் பரம்பொருள் இலிங்க வடிவான ஒளிப்பிழம்பாகத் தோன்றினார். இவ் ஒளிப்பிழம்பின் அடியையும், முடியையும் கண்டு தங்கள் உயர்வை நிலைநாட்டப் பன்றி வடிவெடுத்து பூமியைக்கிளற விஷ்ணுவும், அன்னமாக வடிவெடுத்து வான் பறந்து முடி தேட பிரமனும் முயன்று, தோல்வி கண்டு, அகந்தை ஒழிந்து அரனடி பணிந்தனர். இதனையே இவ்விரத இரவில் 3ஆம் சாம பூசை எடுத்துக்காட்டுகின்றது. இந்நாளில் சைவ மக்கள் நித்திரை விழித்து, வில்வத்தால் அர்ச்சனை செய்து, நான்கு சாம பூசையிலே பால், தயிர், நெய், தேன் போன்றவற்றை முறையே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிஷேகம் செய்து அனுஷ்டிப்பதுடன், விரும்பியோரும், இயலக்கூடியவரும் உபவாசம் இருந்து அனுஷ்டிப்பர். இச் சிவராத்திரியானது மகாசிவராத்திரி, யோகசிவராத்திரி, நித்திய சிவராத்திரி, மாதசிவராத்திரி, பட்சசிவராத்திரி, என 5 வகையாகக் காணப்படுகின்றது. இத்தகைய சிவராத்திரி விரதத்தினை இலங்கையில் உள்ள சைவ மக்கள் திருக்கேதீச்சரத்திலும், திருக்கோணேச்சரத்திலும் அனுஷ்டித்து வருதல் சிறப்பிற்குரியது.

ஆ. சக்தி விரதங்கள்

தைப்பூசம், ஆடிச்செவ்வாய், ஆடிப்பூரம், நவராத்திரி, கேதாரகௌரி விரதம், தை அமாவாசை, பங்குனி உத்தரம், பங்குனித் திங்கள் ஆகியன சக்தி விரதங்களாக அனுஷ்டிக்கப்படுகின்றன. இவற்றுள் நவராத்திரி விரதம் பற்றி நோக்குவோம்.

நவராத்திரி விரதம்

புரட்டாதி மாதம் வளர்பிறைப் பிரதமை முதல் நவமி முடியவரும் 9 நாளும் கும்பத்திலே பூசை செய்து தேவியை அனுட்டிக்கும் விரதமாகும். இதில் வரும் அட்டமிக்கு மகாஅட்டமி என்றும், நவமிக்கு மகாநவமி என்றும் பெயர் இதனால் இந்நோன்பினை மகாநோன்பு (மகர்நோன்பு) என்று சொல்லிக் கொண்டாடுவர். இவ்விரதத்தின் முதல் மூன்று நாட்களும் மலைமகளையும், அடுத்த மூன்று நாட்களும் திருமகளையும், அடுத்த மூன்று நாட்களும் கலைமகளையும் ஆக 9 நாட்கள் நினைத்துப் பூசித்து விரதமிருப்பர். இந்நோன்பினை நோற்பவர்கள் பிரதமையில் எண்ணெய் முழுக்காடி நோன்பைத் தொடங்க வேண்டும். இந்நோன்பு நாட்களில் அபிராமி அந்தாதி, சகலகலாவல்லி மாலை, போன்ற சக்தியின் பாடல்களைப் பாராயணம் செய்வர். அத்துடன் முதல் 8 நாட்களும் ஒரு நேர உணவு உட்கொண்டு ஒன்பதாவது நாள் மகா நவமியில் உபவாசம் இருப்பது உத்தமம். அத்துடன் ஒன்பது நாள் முடிவுற்று பத்தாவது நாள் ஆயுதபூசை எனச் சிறப்பிக்கப்படும் விஜயதசமி நாள் கொண்டாடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இ. விநாயகர் விரதங்கள்

ஆவணிச் சதுர்த்தி, விநாயகர் சதுர்த்தி, விநாயகர் சஷ்டி, ஆகியன விநாயகர் விரதங்களாக நோற்கப்படுகின்றன. இவ் விரதங்களில் சிறப்பான விநாயகர்சட்டி விரதம் பற்றி நோக்குவோம்.

### விநாயகர் சஷ்டி

இவ்விரதம் கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரம் கழிந்த மறுநாள் ஆரம்பித்து 21 ஆவது நாளாகிய சதய நட்சத்திரமும் சஷ்டித் திதியும் கூடிய நாளில் நிறைவு பெறுகின்றது. இந் நாளில் சிறப்பம்சமாக விநாயகப் பெருமான் கஜமுகாசூரனை சம்ஹாரம் செய்த நாளாகும். இதனால் விநாயகர் விரதத்தினுள் இதனை சிறப்பாகக் கொள்ளப்படுகிறது. இவ் விரதத்தின் போது காப்புக் கட்டுதல் முக்கியமான நிகழ்வாகும். அத்துடன் விநாயகபுராணம், விநாயகர் அகவல் போன்ற பாடல்கள் படிக்கப்படுகின்றன.

## ஈ. முருக விரதங்கள்

வைகாசி விசாகம், வெள்ளிக்கிழமைவிரதம், கந்தசஷ்டி விரதம், கார்த்திகை விரதம், தைப்பூசம் ஆகியன முருக விரதங்களாகும். இவ்விரதங்களில் சிறப்புக்குரிய கந்தசஷ்டி விரதம் பற்றி நோக்குவோம்.

### கந்த சஷ்டி விரதம்

ஐப்பசி மாதம் அமாவாசைக்கு அடுத்த பிரதமை முதல் சஷ்டி ஈறாக 6 நாட்களும் அனுட்டிக்கும் விரதம் இதுவாகும். இப்பிரதமை நாளிலே சிவபெருமானது நெற்றிக் கண்ணில் இருந்து தெறித்த 6 பொறிகளும் சரவணப்பொய்கையில் ஆறு உருவமாக வடிவெடுத்தன. அதனை உமாதேவியார் எடுக்க ஆறு திருமுகமும் பன்னிரண்டு திருக்கைகளும் உடைய ஒரு திருவுருவம் எழுந்தருளிய நாள் இதுவாகும். அதே நாளிலே முருகன் சூரபத்மனை சங்காரம் செய்தார். இவ் விரதத்தை அனுட்டிப் பவர்கள் ஒவ்வொருநாளும் காலையில் நீராடி முருகப்பெருமானை வழிபட்டுச் சிறிதளவு நீர்மட்டும் அருந்தி ஆறுநாள் உபவாசம் இருந்து ஏழாம் நாள் சிவனடியாருடன் சிவ பாராயணம் செய்வது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமமாகும். இதற்கு இயலாதவர்களும் முதல் ஐந்து நாளும் ஒரு நேர உணவு உண்டு ஆறாம் நாள் உபவாசம் இருப்பர். இவ் விரதம் பற்றிய கருத்து கந்தபுராண உபதேசக் காண்டத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அதில் தேவர்கள் இவ் விரதத்தைக் கடைப் பிடித்து பயன்பெற்றதாகக் கூறப்பட்டுகின்றது. இவ்விரதம் ஆறு ஆண்டுகள் அனுட்டிக்கப்பட வேண்டும்.

உ. ஏனைய விரதங்கள்

ஆவணி ஞாயிறு, சூரியனுக்கும், புரட்டாதிச் சனி சனீஸ்வரனுக்கும், கிருஷ்ண ஜெயந்தி, வைகுண்ட ஏகாதசி ஆகியன விஷ்ணுவுக்கும், இதை விடத் தந்தையை இழந்தோர் ஆடி அமாவாசையையும், தாயை இழந்தோர் சித்திரைப் பூரணையையும், புரட்டாதி மகாலயம் பிதிர்களுக்காகவும் கொண்டாடப்படும் விரதங்களாகும்.

## அடிப்படைக் கோட்பாடுகள்

இந்து சமயத்தின் அடிப்படையான சில கொள்கைகள் மக்கள் ஒவ்வொருவருக்கும் அடி வேர்களாக உள்ளன. இவை இதிகாசங்களிலும் புராணங்களிலும் விரிவாகக் கூறப்படுகின்றன. அவையாவன வாய்மை, தூய்மை, அகிம்சை, வைராக்கியம், தன்னடக்கம் போன்றனவாகும். இதனுடன் இறை பக்தியும் சிறப்புக்குரிய ஒன்றாகும்.

### வாய்மை

வாய்மை என்பது உண்மை பேசுவதை மாத்திரம் குறிக்காது. நடத்தை வகையில் நேர்மையும், சமூகத்தொடர்பு வகையில் நடுநிலை கோடாமையும், அறிவு வகையில் உண்மை யினையும் கண்ணியம், கபடமின்மை, நம்பிக்கை, பொறுமை, இரசனை போன்ற இயல்புகள் யாவற்றையும் அடக்கியதாகும்.

### தூய்மை

இது உளத்தூய்மை, உடற்தூய்மை என இரண்டு வகைப்படும் உளத்தூய்மை என்பது ஒளிவு மறைவு இன்மை, நேர்மை, பொறாமை, மனக்கசப்பு, தற்பெருமை போன்ற வற்றிலிருந்து விடுவித்தலை குறிக்கும். இவ்வாறே உடற்தூய்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது புறத்தே காணப்படும் உடலை நீராடுதல், சுத்தம் பேணுதல் ஆகியவற்றின் மூலம் ஏற்படுகின்றது.

அகிம்சை

எதிர்மறை வகையிலும் உடன்பாடு வகையிலும் எந்த உயிருக்கும் எவ்விதத்திலும் துன்பம் விளைவிக்காது இருந்து அன்பு கொள்ளலே அகிம்சை ஆகும். இது ஒரு இலட்சியமும் ஆகும். இவ் அகிம்சை மூலமே உயிர்கள் யாவும் உணர்வு பெறுகின்றன.

வைராக்கியம்

கொள்கைகளில் பற்று வைத்திருந்து உலகியற் பற்றுக்களைத் துறத்தல் வைராக்கியம் ஆகும். இதன் போது உலகியல் பற்றுக்கள் வலிமை குன்றும் இதனால் இறைவனோடு ஒன்றாதலுக்கு வழிவகுக்கப்படுகின்றது. விருப்பங்களை விரிவாக்கித் தூய்மைப்படுத்தலே இதன் நோக்கமாகுமே தவிர, விருப்பங்களைத் தியாகம் செய்தல் வைராக்கியத்தின் நோக்கம் அன்று.

தன்னடக்கம்

தன்னடக்கம் என்பது உடல் அடங்கல், உளம் அடங்கல், என இருவகையில் மேற்கொள்ளப்படுகின்றது. அளவுக்கு அதிகமாக உண்ணல், குடிபோதை, பொறி நுகர்வில் இன்பம், அகம்பாவம், மதவெறி போன்ற தீய இயல்புகளையும் நாம் களைதல் வேண்டும். அவ்வாறு செய்தால் பொறுமை, அருள், இரக்கம், நாணம், பணிவு போன்ற நல்லியல்புகள் உருவாகுவதன் மூலம் தன்னடக்கம் வருகின்றது.

இறைபக்தி

இறைவனை அடைவதற்குரிய ஆன்மீக வளர்ச்சி, பிரார்த்தனை, தியானம், அன்பு என்பன பக்தியின் மூலம் ஏற்படுகின்றது. இது ஒழுக்கவியல் வளர்ச்சியின் அடிப்படையில் ஏற்படுகின்றது. பக்தியானது மாசியப்பக்தி, அனன்ய பக்தி, ஏகாந்த பக்தி, பரபக்தி என 4 வகைப்படுகின்றது. இதில் முன்னுள்ள 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகைப் பக்திகளும் அபரபக்தி எனப்படும். நான்காவது பக்தி உயர்நிலைப்பத்தி எனவும் அழைக்கப்படும்.

**மூல நூல்கள்**

இந்து சமயத்திற்குரிய மூல நூல்களாகக் கொள்ளப் படுபவை அனைத்தும் இறைவன் மூலம் இறையடியார்களுக்கு வழங்கப்பட்ட கருத்துக்கள், விடயங்கள், ஏனையவர்களுக்கு வாய் மொழி மூலமாகவே பரிமாறப்பட்டு வந்தவை ஆகும். இங்கனம் பரிமாறப்படுவது சுருதி என்று சொல்லப்படும் இது இன்று வேதம் எனவும் பொருள் பெறுகின்றது. எனவே வேதமே மூல நூலாகும். இதனை வைத்து பல நூல்கள் தோற்றம் பெற்றன. அந்த வகையில் ஸ்மிருதிகள், இதிகாசங்கள், புராணங்கள், ஆகமங்கள், தரிசனங்கள், பிரஸ்தானத் திரயங்கள் என்பன துணை நூலாதார நூல்களாக உள்ளன.

இவற்றினை அடிப்படையாக வைத்துப் பின்பு தோற்றம் பெற்ற சமய நாயன்மார்களது பன்னிரு திருமுறைகளும், வைணவ ஆழ்வார்களது நாலாயிரத் திவ்வியப்பிரபந்தங்களும், சந்தானகுரவர்களுடைய 14 மெய்கண்ட சாஸ்திர நூல்களும், தொகையடியார்களின் பக்தி பாசுரங்களும், அதனை விடப் பிற்காலத்தவர்களது பக்திசார் தோத்திரப்பாடல்களும் இந்து மதத்தில் முக்கிய நூல்களாகக் கொள்ளப்படுகின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ மதசாரம்



இலங்கையில் காணப்படுகின்ற நான்கு மதங்களில் கிறிஸ்தவ மதமும் ஒன்றாகும். இம்மதத்தின் மூலகர்த்தாவாக இயேசுகிறிஸ்து விளங்குகின்றார். இவரது வாயிலிருந்து தோற்றுவித்த விடயங்கள் 'பைபிள்' எனும் நூலிலே புதிய ஏற்பாடு எனும் பிரிவினூடாக வெளிவந்துள்ளது. இம்மதத்தவர் வழிபடும் இடமாக தேவாலயம். அமைகின்றது. இம்மதம் பற்றிய தோற்றமும் வளர்ச்சியும் திருவிழாக்களும், விரதங்களும், அடிப்படைக் கோட்பாடுகள், மூலநூல்கள் ஆகியவை தொடர்பாக ஆராய்வதன் மூலம் கிறிஸ்தவ சமய வளர்ச்சியை அறியலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோற்றமும் வளர்ச்சியும்

கிறிஸ்தவ சமயம் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பு இயேசுக் கிறிஸ்துவால் உருவாக்கப்பட்டது. ஆதியிலே இறைவன் உலகத்தைப் படைத்தார். தனது சாயலாகவும், பாவனையாகவும், சுதந்திரத்துடனும், சுயாதீனத்துடனும் மனிதனைப் படைத்து இவ் உலகை ஆட்சி செய்ய சுதந்திரமாக செயற்பட விட்டு விட்டார். ஆனால் மனிதன் இவற்றுக்கு மேலாகக் கடவுள் நிலையை அடைய வேண்டும் என்ற பேராசை கொண்டு, கடவுளின் கட்டளையை மீறிச் செயற்பட ஆரம்பித்தான். இதனால் கடவுள் அவனை இன்பவனத்திலிருந்து துரத்தினார். அவ்வாறு துரத்திய போதும் தான் படைத்த மனிதனை அவர் கைவிட்டுவிடவில்லை. அவனை மீட்டெடுப்பதற்கு மீட்பர் ஒருவரை அனுப்புவதாகவும் வாக்களித்தார். இதன் காரணத்தால் கடவுள் தன் ஒரே மகனை மரியாள் எனும் கன்னியிடம் அவதரிக்கச் செய்தார். இத்தினம் 'செசார் அகஸ்து' என்ற அரசனின் ஆட்சிக்காலத்தில் உரோமர்களினால் கைப்பற்றப்பட்ட பாலஸ்தீனரைச் சார்ந்த 'பெத்லேகம்' எனும் சிற்றூரில் எளிமையாக மாட்டுத் தொழுவத்தில் உலக இரட்சகராக அவதரித்தார்.

இவ்வாறு அவதரித்த இயேசு பிறப்பதற்கு முன்னே விசேட அருளைப் பெற்றிருந்ததனால் யூத சமூக சம்பிரதாயங்களை நன்கு அவதானித்தார். அன்றைய சமுதாயத்தில் பலவகையான தூண்டல்கள், ஊடுருவல்கள் சீர்குலைந்த ஆட்சிமுறையில் இருந்தது. அவற்றுள் சிக்குண்ட மக்களுக்கு உடல், உள விடுதலை பெற்றுக் கொடுப்பதன் மூலம் புதிய சமுதாயத்தை உருவாக்கப்பாடுபட்டார். இவ்வாறான அன்பின் சமுதாயத்தை கண்டு மக்கள் இயேசுவின் பின்னால் சென்றனர். இவரை இறை தூதராக ஏற்றுக்கொண்டனர். இதற்கு முன் இயேசு 30 வயது வரை மறைவான வாழ்க்கை வாழ்ந்து வந்தார். என்பது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்கது. மறைவான வாழ்க்கையை விட்டு வெளிவந்த இயேசுவை மக்கள் ஏற்றுக்கொண்டனர். யூதர்கள் (பரிசேயர், சதுசேயர்) போன்ற இவரைக் கொலை செய்யத் திட்டம் தீட்டினர். அதற்குத்துணையாக இவரின் சீடரான யூதாஸ்ஸ்கரியோத்து செயற்பட்டு அவரைக் காட்டிக் கொடுத்ததன் மூலம் பிடிபட்ட இயேசுவை மனுக்குலத்தின் முன்னிலையில் குற்றவாளி எனத் தீர்ப்பிட்டு, சிலுவை சுமக்கவிட்டு, கொடுமைகள் பல செய்து, சிலுவையில் அறைந்து கொலை செய்தனர்.

இவ்வாறு இயேசுவுக்குக் கொலைத் தண்டனை வழங்கப்பட்டு அவர் கொலை செய்யப்பட்டதனால் அவர் உருவாக்கிய அன்பின் சமுதாயம் வேரோடு அறுந்து போய்விட்டதென யூதர்கள் (பரிசேயர், சதுசேயர்) மகிழ்ந்தனர். ஆனால் இயேசுவோ மரணத்தை வென்று தாமாகவே வெற்றி வீரனாக 3ஆம் நாள் உயிர்த்தெழுந்தார். இவ் உயிர்ப்பு இடம் பெற்றதை அடுத்து சாட்சி கூறிய அவர் சீடரை தலைமைக் குருக்களும், ஆட்சியாளரும் சித்திரவதை செய்தனர். அத்துடன் அவரின் உயிர்ப்பு பற்றி வெளியிலேதும் சொல்லக்கூடாது எனவும் எச்சரிக்கை விடுத்தனர். இயேசு தன்னை பின்பற்றித் தொடர்ந்தவர்களை சரியான பாதையில் இட்டுச் செல்லவே உயிர்த்து எழுந்தார். கிறிஸ்துவின் உயிரூட்டமான செயற்பாடுகள் இக்கிறிஸ்தவ மதத்திற்கு அடித்தளமாக அமைந்தன. இயேசுநாதர் மரணத்தை வென்று உயிர்த்த உண்மையினாலேயே இம்மதம் இன்னும் சிறப்புற்றிருக்கின்றது. இவ் உண்மையை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. இவ்வாறு இம்மதமானது தோற்றம் பெற்று வளர்ச்சி கண்டு வருகின்றது. இன்று கிறிஸ்தவ சபைகளின் வளர்ச்சியும் இதற்கான காரணமாக அமைகின்றன. றோமன் கத்தோலிக்க மதத்தை நோக்குகின்ற போது பல துறவற சபைகளை இனங்காண்கின்றோம். அந்த வகையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்சிஸ்கன்சபை, அகுஸ்தீனார் சபை, வின்சன்டிபோல் சபை, அமல மரித்தியாகிகள் சபை, அன்புக் கன்னியர்சபை, போன்ற சபைகள் தோன்றி மறையை வளர்க்கின்றன.

இன்று மாணவர்கள், குடும்பங்கள் போன்றவற்றிற்கு மறைக்கல்வி போதிக்கப்படுகின்றன. இதனால் அவர்கள் இயேசுவை பற்றிய விசுவாசத்தை பெறுகின்றனர். கிறிஸ்தவமானது இன்று பொது நிலையினர் முன்னிலையில் கொண்டு வரப்பட்டமையால் இவர்களும் இதனை வளர்க்கின்றனர். இயேசுவின் சீடர்கள் மற்றும் முன்னோர்கள், புனிதர்கள் போன்றோரின் முன்மாதிரியான வாழ்வு என்பனவும் இன்று கிறிஸ்தவம் வளர்ச்சி பெறக் காரணமாகின்றது.

வேதாகமமானது இன்று பல இடங்களிலும் வாசிக்கப்படுவதும் மறை ஒன்றியங்கள், திருப்பலிகள், மகாஞான ஒடுக்கம் என பல இடம் பெறுகின்றமையும் வளர்ச்சியடையக் காரணமாக அமைகின்றது. இதனால் கிறிஸ்தவர்களுக்கு விசுவாசமான வாழ்வு கிடைப்பதனால் இம்மதம் தொன்று தொட்டு வளர்ச்சியடைந்து வருகின்றது.

## வழிபாட்டு முறைகள்

கிறிஸ்தவ சமய வழிபாட்டு முறைகள் பற்றி நோக்கும் போது அது கிறிஸ்தவர்களின் திருவழிபாட்டுச் செயல்கள் என்னும் கட்டமைப்புக்குள் உள்வாங்கப்படுகின்றது. அச்செயற்பாட்டுக்குள் பின்வரும் செயல்களை இவர்கள் கடைப்பிடிக்கின்றனர். அவ்வாறான செயல்களாக திருப்பலி, திருவருட்சாதனங்கள், திருப்புகழ்மாலை, அருட்கருவிகள் என்பன அடங்குகின்றன. எனவே அவைபற்றி சுருக்கமாக நோக்குவோம்.

### அ. திருப்பலி

திருவழிபாட்டின் சிகரம் திருப்பலியே. இது வார்த்தை வழிபாடு, நற்கருணை வழிபாடு எனும் இரு பெரும் பகுதிகளைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுள்ளது. அவற்றுள் ஆரம்ப வழிபாடு, மன்னிப்பு வழிபாடு, நன்றி வழிபாடு இறைவார்த்தை வழிபாடு, நற்கருணை வழிபாடு ஆகியன மூலம் கிறிஸ்தவ விசுவாச உண்மைகள் அத்தனையும் தூண்டப்படுகிறது. மூவொரு கடவுளுக்கு மங்காப் புகழ்மாலை சாற்றுகின்றோம். இயேசுவின் பிறப்பு, வாழ்வு, போதனை, சாதனைகள், வேதனைகள், உயிர்ப்பு, விண்ணேற்பு ஆகியன மீண்டும் நினைவு கூரப்படுகின்றது. திருப்பலியில் கிறிஸ்து சிறப்பான முறையில் பிரசன்னமாய் இருக்கிறார். திருப்பலி வழியாக மனுக்குலத்தின் மீட்புப்பணி உலகம் முடியும் வரை தொடர்ந்து நடைபெறுகின்றது. திருப்பலியில் பங்கு கொள்ளும் இறை மக்களுக்கு இயேசுக்கிறிஸ்து அம்மீட்பின் பலன்களை, அருள் வரங்களை வாரி வழங்குகின்றார். இதனால் மனுக்குலம் மீட்பு பெறுகின்றது. அருள் வாழ்வின் ஊற்றும், களஞ்சியமும், திருப்பலியிலேயே பெறப்படுகிறது. இதில் இறை மக்கள் அனைவரும் ஒன்றாய் வருகின்றனர். தங்கள் பாவங்களுக்கு மனம் வருந்தி மன்னிப்புக் கேட்கின்றனர். இறைவார்த்தையைக் கேட்டு வாழவும் பழகிக் கொள்கின்றனர். அதற்காகக் கடவுளுக்குத் தமது காணிக்கையைக் கொடுக்கின்றனர். நன்றி வழிபாட்டில் சிறந்த முறையில் கடவுளைச் சந்திக்கின்றனர். திருவிருந்தில் கிறிஸ்துவை தமது உணவாகப் பெறுகின்றனர். இவ்வாறு இயேசுவின் கல்வாரிப் பலியை நினைவு கூர்ந்து உன்னதமான திருப்பலிக்கொண்டாட்டத்தில் கிறிஸ்தவ மக்கள் பங்கு கொள்கின்றனர்.

### ஆ திருவருட் சாதனங்கள்

கிறிஸ்தவ மக்களுக்கு இறைவன் இன்று உலகின் மனிதர்களிடையே செயலாற்றுகின்றார் என்பதற்கு காணக்கூடிய அடையாளங்களே திருவருட்சாதனங்களாகும். திருவருட் சாதனங்களில் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணேற்றம் ஆகிய பாஸ்கா நிகழ்ச்சி நினைவு கூரப்படுகின்றது. கிறிஸ்துவின் பாஸ்கா நிகழ்ச்சியிலிருந்து ஊற்றெடுக்கும் அருளை நம் உள்ளங்களில் பொழியும் வெளி அடையாளங்களே திருவருட்சாதனங்கள் இதை ஏற்படுத்திய கிறிஸ்து தமது தெய்வீக ஆற்றலினால் எல்லாத் திருவருட் சாதனங்களிலும் பயன்படுத்தப்படும் பொருட்கள், செயல்களை செபங்கள் ஆகிய அடையாளங்கள் வழியாக கிறிஸ்துவின் வல்லமை மிக்க அருள் மனிதனுக்கு அளிக்கப்படுகின்றது. வாழ்வின் ஊற்றாகிய இறைவன் நம் அன்றாட வாழவில் பயன் பெறுமாறு படைக்கப்பட்ட பொருட்களான தண்ணீர், பரிமளதைலம், வெள்ளைத்துணி, எண்ணெய், அப்பம், இரசம், மெழுகுவர்த்தி ஆகியன உள்ளன. இவை சாதாரண பொருட்களாக இருந்தாலும் அருட்சாதனங்களில் பயன்படுத்தப்படும் போது மிகுந்த அருள் தருபவையாக மாறுகின்றன. இதுவே எமது நம்பிக்கையுமாகும்.

**திருவருட் சாதனங்கள் ஏழு**

1. திருமுழுக்கு / ஞானஸ் தானம்
2. பச்சாத்தாபம் / ஒப்புரவு
3. தேவநற்கருணை / திருவிருந்து
4. உறுதிப்பூசுதல்
5. குருத்துவம்
6. திருமணம் / மெய்விவாகம்
7. நோயில் பூசுதல் / அவஸ்தை பூசுதல்

**இ. திருப்புகழ்மாலை**

சங்கீதங்கள், விவிலிய வாசகங்கள், புனிதரின் போதனைகள், திருச்சபையின் செபங்கள் ஆகியவை திருப்புகழ் மாலையுள் அடங்கும். திருச்சபையின் பொதுச்செபம் வழியாக திருச்சபை இறைவனைப் புகழ்கின்றது. அவருக்கு நன்றி கூறுகின்றது. அவரை வழிபடுகின்றது. சங்க ஏடு கூறுவது போன்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைபுகழ் கூறும் குருத்துவப்பணியை திருச்சபை நற்கருணைப் பலியை நிறைவேற்றுவதால் மட்டுமல்லாது பிற வழிபாடுகளிலும் சிறப்பாக திருப்புகழ் மாலையைச் செபிப்பதிலும் நிறைவேற்றுகின்றது. குருக்களும் துறவறத்தாரும் மட்டுமன்றி பொதுநிலையினரும் திருப்புகழ் மாலையைச் செபிப்பதில் நல்லதென திருச்சங்கம் பரிந்துரைக்கின்றது.

ஈ. அருட்கருவிகள்

மேலே கூறப்பட்ட அடையாளப்பொருட்களை இயேசுவே தேர்ந்து கொண்டு அருளைக் குறிக்கும் கருவிகளாக அருட்சாதனங்களில் பயன்படுத்தினார். இயேசுவைப் பின்பற்றி அவருடைய மறை உடலாம் திருச்சபை வேறும் பல அடையாளங்களைத் தேர்ந்தெடுத்து தம் மன்றாட்டின் வல்லமையால் அக்கருவிகளை இறைபணிக்கும் ஞான வாழ்க்கைக்கும் உதவியாக ஏற்படுத்தியுள்ளது. இவையே அருட்கருவிகள், பீடம், திருச்சிலுவை, செபமாலை, உத்தரியம், திருநீறு, என்பன சில எடுத்துக்காட்டுகளாகும். அருட்கருவிகளால் நாம் பெறும் அருளுதவி எமது நம்பிக்கையையும் இறைபற்றையும் பொறுத்து விளங்கும்.

## பெருவிழாக்களும், விரதங்களும்

கிறிஸ்தவ மக்கள் தமது கலை கலாசாரத்தை பிரதிபலிக்கவும் அவற்றை முன்னெடுத்து வளர்த்துச் செல்லவும் கிறிஸ்துவின் உயிர்ப்புப் பெருவிழா, கிறிஸ்துவின் பிறப்புப் பெருவிழா, கிறிஸ்துவின் திரு இரத்தப்பெருவிழா, தேவமாதாவின் விண்ணேற்றப் பெருவிழா, தேவதாயின் மாசில்லா உற்பவப் பெருவிழா, இறைவனின் அன்னைப் பெருவிழா போன்ற சிறப்பு மிகுந்த விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. அத்துடன் விபூதிப்புதன், பெரிய வெள்ளி போன்ற ஒரு சந்தி நாட்கள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரதங்களை பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவரும் 60 வயதிற்குக் கீழ்ப்பட்டவரும் அனுசரிக்க வேண்டும். அத்துடன் இந்நாட்கள் மாமிசத்தவிர்ப்பு நாட்களாகவும் கடைப்பிடிக்கப்படும். இது சிறப்பாகக் கவனிக்க வேண்டும். எனவே இவ்வாறான கிறிஸ்தவ சமயப்பெருவிழாக்களையும் விரதங் களையும் நோக்குவோம்.

## பெருவிழாக்கள்

### 1. கிறிஸ்து உயிர்ப்புப் பெருவிழா

புதிய சமுதாயத்தைக் கட்டியெழுப்பத் தம்மையே அர்ப்பணித்த கிறிஸ்துவை யூதர்கள் சிலுவை மரணத்திற்கு உட்படுத்திச் சிலுவையில் அறைந்தனர். ஆனால் மூன்றாம் நாள் கிறிஸ்து வெற்றி பெற்றார். தாம் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர் என நிரூபித்து மரணத்தை வென்றவராக உயிர்தெழுந்த நிகழ்வை இது குறிக்கும். "கிறிஸ்து உயிர்த் தெழவில்லையாயின் கிறிஸ்தவரான எமது விசுவாசம் வீண் என்கின்றார்" தூய பவுலடியார். (கொருந்தியர்:15:14)

### 2. கிறிஸ்து பிறப்புப் பெருவிழா (கிறிஸ்மஸ்)

இறைமகனாம் கிறிஸ்து பாவிகளாகிய எம்மை மீட்பதற்காக மனுஉரு எடுத்த நிகழ்வை இது காட்டுகின்றது கன்னி மரியாளின் வயிற்றிலே "பெத்தலகம்" என்னும் சிற்றூரில் மாட்டுத்தொழுவத்தில் வைக்கோலுக்குள் நடுவில் கடுங்குளிரில் டிசெம்பர் மாதம் 25ஆம் திகதி அவதரித்த தினமாகும்.

### 3. தேவமாதாவின் விண்ணேற்றப் பெருவிழா

கிறிஸ்துவின் தாய் புனித கன்னி மரியாள். இவள் தன்னுடைய மண்ணுலக வாழ்வு முடிந்ததும் ஆன்மாவுடனும் உடலுடனும், விண்ணகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட நிகழ்வை ஓகஸ்ட் 15ம் திகதி நினைவு கூர்ந்து கொள்ளும் நாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. **தேவதாயின் மாசில்லா உற்ப்பவப் பெருவிழா**

இறை தந்தையின் மீட்புத் திட்டத்தில் முன் குறித்து வைக்கப்பட்டவள் அன்னை மரியாள். உலக மீட்பரை தன் வயிற்றில் தாங்கப் பாக்கியம் பெற்றவள். உலகின் பாவங்களைப் போக்குபவர். கருவாக உருவாகி அன்னை மரியின் திரு உதிரத்தை இறைவன் புனிதமாக்க விரும்பினார். அவரை சென்மபாவக் கறையிலிருந்து காப்பாற்றினார். அந்நிகழ்வே திருவிழாவாக டிசெம்பர் 8ம் திகதி கொண்டாடப்படுகிறது.

5. **இறைவனின் அன்னைப் பெருவிழா**

வருடத்தின் முதல் நாள் அதாவது ஜனவரி முதலாந் திகதி இறைவனின் அன்னைக்கு உரியதாகும். ஏனெனில் அவள் தனது பரிந்துரை வழியாக அந்த ஆண்டு முழுவதும் எம்மைக் காப்பாற்றுவாள் என்ற நம்பிக்கையை ஊட்டுகின்ற நாளாக இந்நாள் அமைந்து காணப்படுகிறது.

6. **மரித்த ஆத்துமாக்களின் திருவிழா**

இறந்து போன அனைத்து ஆத்துமாக்களும் இறைபதம் அடைய வேண்டும் எனக் கொண்டு இறைவனிடம் வேண்டுவது ஆகும். இத்திருநாள் நவம்பர் 2ஆம் திகதி கொண்டாடப்படுகிறது.

7. **சகல புனிதர்களின் திருவிழா**

இத்திருநாளானது புனிதர்கள் ஒவ்வொருவருக்கும் கொண்டாடும் திருநாளாகும். இத் திருநாள் நவம்பர் 1ஆம் திகதி கொண்டாடப்படுகிறது.

8. **இயேசுவின் விண்ணேற்புத் திருவிழா**

இயேசு இறந்து மூன்றாம் நாள் உயிர் பெற்றார். பின்னர் அவர் ஆன்மாவோடும் உடலோடும் விண்ணேற்பு அடைந்தமை கொண்டாடப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 9. தூய ஆவியின் திருவிழா

இதனை இயேசு விண்ணகம் சென்ற பின் தமது சீடர்களுக்கு அக்கினி வடிவில் வெளிப்படுகின்றார். இதனை நாம் "பெந்தக் கோஸ்தே" திருநாள் என அழைக்கின்றோம்.

## விரதங்கள்

### 1. விபூதிப்புதன் (திருநீற்றுப்புதன்)

கிறிஸ்தவ விரதங்களை நோக்கும் போது விபூதிப் புதன் என்பது முக்கியமானதாகும். இங்கு அனைவரும் நீராடி தலைக்கு எண்ணெய் தேய்த்து மிகவும் துக்க நாளாக கடைப்பிடிக்கின்றனர். இன்றைய நாள் கறுப்பு அல்லது வெள்ளை ஆடை அணிந்து கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை தியானிக்கும் முகமாக அன்றைய நாளில் தூய்மையான விரதம் மேற்கொள்கின்றனர்.

### 2. தவக்காலம்

விபூதிப்புதன் ஆரம்பித்து தொடர்ந்து வரும் நாற்பது நாட்கள் வரை இதுகடைப்பிடிக்கப்படுகின்றது. இது மனமாற்றத்தின் காலம். எனவே கிறிஸ்தவர்கள் மனமாற்றத்திற்குரிய செயல்களாகிய ஒறுத்தல், நாவடக்கம், இறை விசுவாசம் என்பவற்றில் தம்மை முழுமையாக ஈடுபடுத்துவர்.

### 3. பெரிய வெள்ளி

இவ்வெள்ளியானது புனித வெள்ளி எனவும் சொல்லப்படுகிறது. இவ்வெள்ளியன்றே இயேசுவின் பாடுகள், மரணத்தினை நினைவு கூர்ந்து அவரின் துன்பத்தில் பங்கு கொள்ளுதல்.

### 4. கிழமை வார விரதங்கள்

இங்கு செவ்வாய், வியாழன், மற்றும் வெள்ளிக் கிழமைகளில் நேர்த்திக்காகவும், புனிதர்களுடாகக் கேட்ட வரங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவடையவும் தூய்மையான விரதங்களை கடைப் பிடிக்கின்றனர். எனவே விரதமானது முக்கிய ஒன்றாக அமைகிறது.

## அடிப்படைக் கோட்பாடுகள்

இறைவன் எல்லாம் வல்லவர்; நீதிமான். அவரது நீதி உலகை ஆட்சி புரிகின்றது. இவை போன்று இறைவனின் அன்பை எடுத்துக் கூறுவது இயேசுக்கிறிஸ்துவின் அடிப்படையான போதனை ஆகும். இறைவன் தமது போதனை வழியாக கிறிஸ்தவர் வாழ வேண்டிய முறை பற்றி எடுத்து இயம்புகிறார். இறைவனின் நீதி மேலானது. இது மனித நீதி சட்ட திட்டங்களிற்கு மேலானதாகக் காணப்படுகிறது. இயேசுநாதரின் புதிய கண்ணோட்டம் போதிப்பதாவது எளியமனத்தோர், துயருறுவோர், சாந்தமுள்ளோர். நீதியின் பால் பசி தாகம் கொள்ளுவோர், தூய உள்ளத்தோர், சமாதானம் செய்வோர், நீதியின் பொருட்டு துன்பப்படுவோர், ஆகியோர் பேறு பெற்றோர் என்பதாகும். இவ்வாறு பேறு பெற்றவர்கள் மனித சமுதாயத்தில் முக்கிய பங்காற்றி வருகின்றனர். இவர்கள் பகைவரை அன்பு செய்யவும் நோயுற்றவரைக் குணமாக்கவும் அவர்களிற்காகச் செபிக்கவும், மக்களை ஊக்கப்படுத்தி வருகிறீர்கள். உலக செல்வங்களினூடாக மனிதன் திருப்தி அடைவதில்லை. ஆகையால் மனித வாழ்வின் குறிக்கோள் உண்பதிலும் உடுப்பதிலும் அல்ல நித்திய அன்பைப் பெற்றுத் தரும் இறை அரசை தேடுவதில் நாட்டமிருக்க வேண்டும். “உங்களிற்கு பிறர் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அவற்றை எல்லாம் நீங்களும் அவர்களிற்குச் செய்யுங்கள்” (மத்தேயு:7:12) “எவனாவது உன் வலக்கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டு” (லூக்கா:6:29)என்ற கூற்றிற்கு இணங்கி வாழ வேண்டும். இவ்வறாக கிறிஸ்தவ கோட்பாடானது முற்று முழுதாக அன்பையும், பகிர்ந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுக்கொடுக்கும் தன்மையையும் உண்மை பேசும் நிலையையும் எடுத்துக் காட்டுகின்றது. இவ்வாறு கிறிஸ்தவ மத அடிப்படைக் கோட்பாடானது இரண்டு முக்கிய கட்டளைகளில் பொதிந்து காணப்படுகின்றது

1. உன்முழு இதயத்துடனும், ஆன்மாவுடனும் ஒரே இறைவனை அன்பு செய்வது.
2. உன்மீது நீ அன்பு காட்டுவது போல உன் அயலான் மீதும் அன்பு காட்டுவாயாக என்பதாகும்.

## மூலநூல்கள்

தொன்று தொட்டு கிறிஸ்தவர்களால் புனிதப்படுத்தப்பட்டு, பரம்பரை பரம்பரையாகப் பாதுகாக்கப்பட்ட நூல். இது இறைவனுடைய வார்த்தைகள் அடங்கியது. இதைத் திருநூல், புனிதநூல், பரிசுத்த வேதாகமம், பைபிள், திருவிவிலியம், இறைவனின் வார்த்தை அடங்கியநூல், விவிலியம் எனும் பெயர்களால் கூறப்படுகிறது. இது 73 புத்தகங்களைக் கொண்டது. அதில் 46 புத்தகங்கள் பழைய ஏற்பாடு எனவும், 27 புத்தகங்கள் புதிய ஏற்பாடு எனவும் இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இருந்தாலும் அவற்றில் பல உபபிரிவுகள் காணப்படுகின்றன. அவற்றினை பிரித்து நோக்குவோம்.

### பழைய ஏற்பாட்டு நூல்களில்

1. வரலாற்று நூல்கள்

* தொடக்க நூல்
* விடுதலைப் பயணநூல்
* லேவியர் ஆகமம்
* எண்ணாகமம்
* இணைச்சட்டம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இணைச்சட்ட வரலாற்று நூல்கள்

* யோசுவா
* நீதித்தலைவர்கள்
* சாமுவேல் முதல் நூல்
* சாமுவேல் இரண்டாம் நூல்
* அரசர் முதல் நூல்
* அரசர் இரண்டாம் நூல்

3. குறிப்பேட்டு வரலாறு

* எஸ்ரா
* நேகேமியா
* குறிப்பேடு முதல் நூல்
* குறிப்பேடு இரண்டாம் நூல்

4. மக்கபேயர் வரலாறு

* மக்கபேயர் முதலாம் நூல்
* மக்கபேயர் இரண்டாம் நூல்

5. அறிவுரை சார்ந்த வரலாற்று நூல்கள்

* ரூத்
* தோபித்
* யூடித்
* எஸ்தர்

6. இலக்கிய நூல்கள்

* யோபு
* திருப்பாடல்கள்
* நீதி மொழிகள்
* சபை உரையாளர்
* சாலமோனின் ஞானநூல்
* சீராக்கின் ஞானநூல்
* இனிமை மிகு பாடல்கள்

7. இறைவாக்கினர் நூல்கள்

* எசாயா
* பாரூக்
* எசேக்கியேல்
* எரேமியா
* மீக்கா
* தானியேல்
* ஓசேயா
* நாகூம்
* ஆமோஸ்
* யோவேல்
* யோனா
* ஒபதியா
* ஆகாய்
* அபக்கூக்கு
* செக்கரியா
* மலாக்கி
* செப்பனியா
* புலம்பலாகமம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய ஏற்பாட்டு நூல்களில்

1. நான்கு நற்செய்தி நூல்கள்
   * மத்தேயு நற்செய்தி
   * மாற்கு நற்செய்தி
   * லூக்கா நற்செய்தி
   * யோவான் நற்செய்தி

2. திருத்தூதர் பணி

3. தூய பவுலின் திருமுகங்கள்
   * உரோமையர்
   * 1ஆம் கொரிந்தியர்
   * 2ஆம் கொரிந்தியர்
   * கலாத்தியர்
   * எபேசியர்
   * பிலிப்பியர்
   * கொலோசேயர்
   * 1ஆம் தெசலோனிக்கேயர்
   * 2ஆம் தெசலோனிக்கேயர்
   * 1ஆம் தீமோத்தேயு
   * 2ஆம் தீமோத்தேயு
   * தீத்து
   * பிலமோன்
   * எபிரேயர்
   * யாக்கோபு
   * 1ஆம் பேதுரு
   * 2ஆம் பேதுரு
   * 1ஆம் யோவான்
   * 2ஆம் யேவான்
   * 3ஆம் யோவான்
   * யூதா

4. திருவெளிப்பாடு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய மதசாரம்



இலங்கையில் காணப்படுகின்ற சிறப்புமிக்க மதங்களில் இஸ்லாமும் ஒன்றாகும். இஸ்லாம் என்றால் தூய்மை எனப்பொருள்படும். இத்தூய்மையிலே உடல், உள மற்றும் அனைத்துத் தூய்மைகளும் உள்ளடங்குகின்றன. இஸ்லாமானது கண்ணியம் மிக்க அல்லாஹுத்தாவால், (றசூல், நபிமார் களுக்கூடாக காலத்துக்குக் காலம்) மக்களை சீர்ப்படுத்தி. வழிகாட்டி பெறப்பட்ட அழகான, அமைதியான மார்க்கமாகும். இஸ்லாம் மதத்தைச் சார்ந்தோர், வழிபாட்டுத் தளமாக பள்ளிவாசலைக் கொள்கின்றனர். முஸ்லீம்களின் பிரதான வழிபாட்டு நூலாக அல்குர்ஆனையும், அல்ஹுதீதையும் கொள்கின்றனர். எனவே இவ்வாறு விளங்கும் இஸ்லாம் சமயத்தின் சாரங்களையும் விளக்கங்களையும் தோற்றமும் வளர்ச்சியும், வழிபாட்டுக் கடமைகளும் சடங்குகளும், அடிப்படைக்கோட்பாடுகள், மூலநூல்கள் என்பவைபற்றிச் சுருக்கமாக ஆராய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோற்றமும் வளர்ச்சியும்

முஸ்லீம்களால் உயிரை விடபல மடங்குகள் கண்ணியமாக மதிக்கப்படும் அல்லாஹ்வின் வேதம் இதுவாகும். கோடான கோடி உயிரினங்களைப் படைத்துப் பரிபாலிக்கின்ற அல்லாஹு"த்தலா பூமியில் எந்த ஒரு படைப்பையோ, உயிரினங்களையோ படைக்கும் முன்னர் தீர்மானித்து விட்டான். இஸ்லாம் மதத்தின் இறைவனின் அதாவது அல்லாஹ்வின் கருணையையும், மகத்துவத்தையும், சக்தியையும் படைப்பாற்றலையும், எண்ணிலடங்காப் பண்புகள் கொண்ட அல்லாஹ்வைப் புரிந்து கொள்வதே எம்மைப் பொறுத்தவரை இஸ்லாத்தைப் புரிந்து கொள்வதற்கு, ஏன் உண்மையில் மு.'.மீனாக மாறுவதற்குச் சமன் ஆகும்.

அல்லாஹ் என்று புகழ் ஓங்கக் கூறுகின்றோமே அவன் யார்? அவன் தான் எங்கள் இறைவன், கடவுள் (படைத்தவன்). ஏன் எல்லாமே அவன்தான். அவன் ஏகன், தனித்தவன் , படைப்பாற்றல் உடையவன், அழிக்கும் ஆற்றல் உடையவன், அவன் எவரையும் பெறவும் இல்லை, எவராலும் பெறப்படவும் இல்லை, நிலையானவன், நீதியானவன், ஆரம்பமானவன், இறுதியானவன், நியாயத் தீர்ப்பு நாளின் அதிபதி, இவ்வாறான வலுமிக்க பெயரையும், கருத்துச் செறிவையும், தன்னகத்தே கொண்ட 99 அழகிய திருநாமங்களைப் பெற்றவன். அவனே.

அல்லாஹ்வின் நாட்டமின்றி எதுவும் நடக்காது என்பதில் சந்தேகம் இல்லை. அவன் எத்தகையவன் என்றால், ஒரு பொருளை, ஒரு உயிரை, எதையென்றாலும் சரி "குன் ஆகுக" என்றாலே அது உடனே ஆகிவிடும்.

இவ்வாறான சிறப்புக்களைக் கொண்ட அல்லாஹ்வால் மனித குலத்திற்கெல்லாம் தலைவராக உத்தம புத்திரராக கண்மணியாம் றசூலே கரீம் முகம்மது நபி (ஸல்) அவர்கள் இறுதி நபியாகவும், இறுதி றசூலாகவும் குறைசியர் குலத்திலிருந்து தோற்றம் பெற்றார். ஆசியா கண்டத்தின் தென்மேற்கே அமைந்துள்ள அரபு நாட்டின் பிரதான நகரமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கா விளங்குகின்றது. மக்கா நகரத்திற்கு அண்மையில் எமன் அமைந்திருந்தது. அதன் மாகாண அதிபதியாக "அப்ரஹா" இருந்தான். மக்கா நகரின் பிரதான வழிபாட்டுத் தலமான க.்.பா மீது பொறாமை கொண்ட அப்ரஹா அதனை உடைக்க எண்ணி யானைப்படையுடன் சென்றான். அல்லாஹ்வால் ஆப்ரஹாவின் படை சப்பித்துப்பப்பட்ட வைக்கோலைப் போல் ஆக்கி புனித வணக்கஸ்தலமான க.்.பாவை அல்லாஹ் பாதுகாத்தான். அவ்வருடம் (ஆமுல்பீல் - யானை ஆண்டு) எனப் பெயர் பெற்றது. அமுல் பீல் வருடத்தில் "ரபீயுல் அவ்வல்" பிறை, 12, திங்கட்கிழமை அதிகாலையில் முகம்மது நபி (ஸல்) அவர்கள் பிறந்தார்கள்.

நபியின் தந்தையான அப்துல்லாஹ் நபி பிறக்கும் முன்பே இறந்து விட்டார். நபியின் தாயின் பெயர் ஆமினாவாகும். கலீமா என்ற செவிலித்தாய் முகம்மது நபிக்குப் பால் கொடுத்து 2 வருடம் வளர்த்தார். அதன்பின் தாய் ஆமினாவும் மரணித்த பின், முகம்மது நபியைப் பாட்டன் அப்துல்முத்தலிப் பொறுப்பேற்றார். அவரும் மரணிக்க பெரிய தந்தை, அபூதாலிப் அக்குழந்தையை வளர்த்து வந்தார்.

எழுதப்படிக்கத் தெரியாத உம்மியாக வாழ்ந்து வந்தார்கள். அக்காலகட்டம் கொலை, கொள்ளை, பெண்குழந்தைகளை உயிருடன் புதைத்தல், மது, சூது, விலைமாது என்பன சாதாரணமாகக் காணப்பட்ட ஜாஹிலியாக் காலமாகும். அக்காலத்திலே உண்மை, நேர்மை, நம்பிக்கை, நாணயம் வாக்கு முதலான நற்பண்புகள் கொண்ட நபியை அவ்வூர் மக்கள் அல் அமீன் (நம்பிக்கைக்குரியவர்), அஸ்ஸாதிக் (உண்மையாளன்) என்று அழைத்தனர்.

நற்பண்புகள் நிறைந்த இவருக்கு 40 வயதில் இறைவனால் நபித்துவம் கிடைத்தது. இது ஹிராக் குகையில் வைத்து "நாமூஸ்" எனும், ஜப்ரில் (அலை) அவர்களால் வஹி மூலம் கிடைக்கப்பெற்றது.

இறைவனால் பூமிக்கு அனுப்பப்பட்ட 124,000 நபிமார்களில் கடைசியாக அனுப்பப்பட்ட முகம்மது நபி 40 வயதில் நபித்துவம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்தும் 63 வயது ஆயுள் கொண்டும் இஸ்லாத்தின் பால் அதிக எண்ணிக்கையான மக்களை நல்வழியின் பால் ஈர்த்து எடுத்த பெருமை நபியையே சாரும். இதற்கு முன்னரும் இறைவனால் அனுப்பப்பட்ட நபிமார்கள் உயிரைத் துச்சமாக மதித்து அல்லாஹ்விற்காகவும், இஸ்லாத்திற்காகவும் போராடினார்கள் இவர்களில் பிரதானமாக 25 நபிமார்களே அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. இவர்களில் மிகவும் பிரதானமானவர்களாக ஆதம்நபி, இப்ராஹீம்நபி, மூஸர்நபி, ஈஸாநபி, எங்கள் இறுதித்தூதர் முகம்மது நபி (ஸல்) அவர்களைக் கூறலாம்.

அல்லாஹ்வின் விதிப்படி முதல் மனிதரான ஆதம்நபியை மண்ணால் படைத்தான். மேலும் இதனால் அவரை "அபுல் - பஷர்" (மனிதர்களின் தந்தை) எனவும் அழைப்பர். அவர்களில் இருந்து "ஹவ்வா" என்ற பெண்ணைப் படைத்தான். அவர்கள் இருவர்களில் இருந்து மனித சமுதாயம் பெருகியது. அல்லாஹ் ஆதம் (அலை) அவர்களை மண்ணால் படைத்தான். அவருக்கு உயிரும் கொடுத்தான். அவர் அறியாதவற்றை அல்லாஹ் அவனுக்குக் கற்றுக்கொடுத்தான். ஹவ்வாவை அவருக்கு மனைவியாகக் கொடுத்தான். அவர்கள் இருவரையும் அல்லாஹ் சொர்க்கத்தில் வைத்தான். அங்கு வாழும்போது குறிப்பிட்ட மரத்தை அணுகக்கூடாது என்று தடை விதித்தான். ஆனால் அவர்கள் அந்தத் தடையை மீறக் கூடியவாறு ஷைத்தான் சூழ்ச்சி செய்தான்.

அல்லாஹ் ஆதம் (அலை) அவர்களைப் படைத்த பின்னர் ஆதம் (அலை) அவர்களுக்கு சுஜூது செய்யுமாறு அல்லாஹ் மலக்குகளைப் பணித்தான். எல்லோரும் சுஜூது செய்தனர். ஆனால் அவர்களுடன் இருந்த "இப்லீஸ்" எனும் ஷைத்தான். சுஜீது செய்யவில்லை. நெருப்பால் படைக்கப்பட்ட நான் மண்ணால் படைக்கப்பட்டவருக்கு சிரம் பணிய முடியுமா என கர்வம் கொண்டான். இதனால் அல்லாஹ்வின் சாபத்திற்கு உள்ளாகினான். இதனால் ஆதம் (அலை) அவர்கள் மீது அவனுக்கு கோபம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டது. ஆதம் (அலை) அவர்களையும் அவர்களின் சந்ததியினரையும் வழிகெடுக்க அல்லாஹ்விடம் அனுமதி கேட்டான். "எனது நல்லடியார்களை உன்னால் வழிகெடுக்க முடியாது என அல்லாஹ் பதிலளித்தான். எனினும் முன், பின், இடம், வலம் ஆகிய 4 பக்கங்களிலும் நின்று மனிதனை வழிகெடுப்பதாக அவன் சபதம் செய்தான்.

இதன் முதற்கட்டமாகவே ஆதம் (அலை) அவர்களையும் அவரின் மனைவியையும் சுவனவாழ்வில் இருந்து வெளியேற்ற வழிசெய்தான். அதில் அவன் வெற்றியும் கண்டான். "அல்லாஹ்வின் கோபத்திற்குள்ளான அவர்கள் அல்லாஹ்வினால் பூமியில் வெவ்வேறு இடங்களில் தனித்தனியாக விடப்பட்டனர். அவர்கள் தமது தவறுக்காக அல்லாஹ்விடம் அழுது புலம்பி மன்னிப்புக் கோரினார்கள். பின்பு அல்லாஹ் இவர்களை மன்னித்தான். மீண்டும் அவர்களைச் சேர்த்து, அதன் பாதையில் மனித சந்ததி பெருகியது.

இவ்வாறாக முதல் மனிதரான ஆதம் நபியில் இருந்து மனிதர்களை நல்வழிகாட்டுவதற்காக 1,24, 000 நபிமார்களும் 313 ரசூல்மார்களும் காலத்திற்குக்காலம் இறைவனால் அனுப்பப்பட்டு மக்களுக்கு நற்போதனை செய்தனர். இவ்வாறாகவே இஸ்லாம் எம்மத்தியில் கொண்டுவரப்பட்டது. இஸ்லாமானது நபிமார்கள், ரசூல்மார்களுக்குகூடாகக் காலத்திற்குக் காலம் வழிகாட்டலுடன் கொண்டு வரப்பட்டுப் பின்னர் முகம்மது நபியின் அபூபக்கர் ரழி, உமர் ரழி, உஸ்மான் ரழி, அலி ரழி, போன்ற குல்பாஉர் ராசிதீயின் களுக்கூடாகத் தாபியீன்கள், தபஉ தாபிலீன்களூடாகக் கட்டிக்காப்பாற்றப்பட்டு, இன்று எம் மத்தியில் இஸ்லாம் மதம் கண்ணியமாகக் கொண்டு வரப்பட்டுப் பின்பற்றப்படுகிறது.

## அடிப்படை வழிபாட்டுக் கடமைகள்

இஸ்லாத்தின் பிரதான வழிபாட்டுக் கடமைகள் 5 ஆகும். அவை கலிமா, தொழுகை, ஸக்காத், நோன்பு, ஹஜ் என்பன வாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. கலிமா

"லாயிலாஹா இல்லல்லாஹு முஹம்மதுர்ரஸூலில்லாஹ்" (வணக்கத்திற்குரிய நாயகன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாருமில்லை; முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதர் என்றும் சாட்சி கூறுகின்றேன்) என்று பொருள்படும். இதுவே இஸ்லாத்தின் முதல் கலிமாவாகும். இக்கலிமாவானது அனைத்து அண்டசராசரங்களையும் விடப்பலமடங்கு சிறந்தது. இக்கலிமாவைச் சற்று ஆழமாக எடுத்து நோக்குவோமாயின், உலகைப் படைத்துப் பரிபாலிக்கின்ற அல்லாஹுத்தாலாவே வணக்கத்துக்குரிய நாயகனாகும்.

மேலும் இக்கலிமா உட்பட 5 கலிமாக்கள் இஸ்லாத்தில் காணப்படுகின்றன.

2. **தொழுகை (அஸ்ஸலாத்)**

'அஸ்ஸலாத்' என்பது மொழிக்கருத்தில் 'பிரார்த்தனை' எனப் பொருள்படும். இஸ்லாமிய பிரயோகத்தில் "அல்லாஹு அக்பர்" எனும் வார்த்தையுடன் ஆரம்பித்து "அஸ்ஸலாமு அலைக்கும்" எனும் ஸலாமுடன் முடிவடையும். சில ஓதல்களையும் (பாத்திஹா, அத்தஹிய்யாத்) செயல்களையும் (ருகூவு,சுஜூது....) உள்ளடக்கியதாகும்.

தொழுகை ஒவ்வொரு முஸ்லீமினதும் கட்டாயக் கடமையாகும். எனவே தான் இது இமாதுதீன் (மார்க்கத்தின் தூண்) என அழைக்கப்படுகின்றது.

தொழுகையை ஒவ்வொரு முஸ்லீமும் கட்டாயமாக நிறைவேற்ற வேண்டும். இதிலிருந்து நோயாளிகள், பிரயாணிகள், வயோதிபர்கள் யாரும் விதிவிலக்குப் பெறமாட்டார்கள். எனவேதான் தொழுகையை நின்று தொழமுடியாதவர்கள். அமர்ந்து கொண்டு சாய்ந்து கொண்டு தொழவேண்டும். வுழூச்செய்ய முடியாதவர்கள். தயமமும் செய்து தொழ வேண்டும். வுழூவும், தயமமும் செய்ய முடியாதவர்கள் (பாகிதுத்தஹூரைன்) குறிப்பிட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்தில் வுழூச்செய்ததாக மனதில் நினைத்துக் கொண்டு தொழவேண்டும். பிரயாணம் போன்ற தவிர்க்கமுடியாத காரியங்களில் ஈடுபடுபவர்கள் இரண்டு நேரத் தொழுகைகளைச் சேர்த்து, சுருக்கி, முற்படுத்தி (தக்தீம்), பிற்படுத்தித் (தாஹீர்) தொழவேண்டும். இவ்வாறு பல்வேறு சலுகைகள் தொழுகைக்கு மாத்திரம் வழங்கப்பட்டது. இவை மூலம் தொழுகையின் மூலம் ஓர் அடியான் அல்லாஹ்வுடன் உரையாடுகின்றான். எனவேதான் தொழுகையை "முனாஜாதுல் மு.'.மின்" (மு.'.மின் அல்லாவடன் உரையாடல்) எனக்குறிப்பிடுவர். தொழுகையை நிறைவேற்றுவதன் மூலமே ஈமான் உறுதியடைகின்றது. மேலும் தொழுகை முக்கியத்துவத்தை அல்குர்ஆன் , அல்ஹதீஸ் விளக்குகின்றது.

"நிச்சயமாகத் தொழுகை மு.'.மீன்மீது நேரம் குறித்துக் கடமையாக்கப்பட்ட ஒன்றாகும்." (அல்குர்ஆன்)

"யாருக்குத் தொழுகை இல்லையோ அவருக்கு இஸ்லாத்தில் பங்கு இல்லை" (அல்குர்ஆன்)

போன்ற ஆதாரங்கள் தொழுகையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன. மேலும் தொழுகையின் மூலம் ஆத்மீக, லௌகீக பயன்களைப் பெற்றுக் கொள்கின்றோம்.

**அ). ஆத்மீகப்பயன்கள்**

இறையச்சம், பாவங்களில் இருந்து பாதுகாப்பு, ஆத்மீகபலம், இறை நெருக்கம், சுவர்க்கம்.

**ஆ) லௌகீக பயன்கள்**

தூய்மை, கட்டுப்பாடு, ஒழுங்கு, உடற்பயிற்சி, போன்ற இன்னும் பல நன்மைகளைத் தொழுகை மூலம் பெற்றுக் கொள்கின்றோம். இவ்வாறான விடயங்கள் தொழுகையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன.

3. ஸகாத்

'ஸகாத்' எனும் சொல் "ஸக்கா" எனும் வினைச்சொல்லில் இருந்துதோன்றியதாகும். இதன்மொழிக்கருத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தூய்மைப்படுத்தினான்' 'அபிவிருத்தி செய்தான்' எனப் பொருள்படும்.

இஸ்லாமிய பிரயோகத்தில் வசதி படைத்த முஸ்லீம்கள் தமது செல்வத்தில் இருந்து சிறிய தொகையைக் குறிப்பிட்ட எட்டுக் கூட்டத்திற்குக் கட்டாயமாகச் செலுத்த வேண்டியது கடமையாகும். ஸகாத் என்னும் சொல்லை விளங்கப்படுத்துவதற்குத் தனியான ஒரு சொல் ஏனைய மொழிகளில் காணப்படவில்லை. எனவே இதனைத் தர்மம், இனாம், கொடை என்னும் சொற்களின் மூலம் மொழிபெயர்த்தால் அதன் உண்மையான கருத்தைப் பெறமுடியாது உள்ளது. எனவே தான் இஸ்லாமிய அறிஞர்கள் ஸக்காத் என்னும் சொல்லை மொழிபெயர்த்துக் கூறுவது இல்லை. அல்குர்ஆனில் ஸக்காத் என்றும் சொல் "ஸதக்கா" என்னும் சொல்லாலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நபியே! நீர் அவர்களின் சொத்துக்களில் இருந்து ஸதக்காவை (ஸகாதை) எடுப்பீராக"

ஸக்காத் எனும் சொல் தூய்மை, அபிவிருத்தி என்னும் மொழிக்கருத்துக்களை கொண்டது. இக்கருத்துக்கள் ஸகாத் கொடுப்பவர், எடுப்பவர், சமூகம் ஆகிய மட்டங்களில் பிரயோகிக்கப் படுவதை காணலாம்.

## (i) ஸக்காத் விதியாகும் பொருட்கள்

1. கனிப்பொருட்கள் (தங்கம், வெள்ளி, புதையல்)
2. தானியம்
3. பழவகை
4. கால்நடை
5. வியாபாரப்பொருட்கள்

மேலும் இவற்றை ஏழைகளிற்குக் கொடுப்பதற்குச் சில சட்டவிதிகள் காணப்படுகின்றன. தன்னிடம் இருக்கும் சொத்தில் குறிப்பிட்ட அளவே ($2\frac{1}{2}$ %) கொடுக்கப்பட வேண்டும்.

## (ii). ஸகாத் பெறத் தகுதியானவர்கள்

1. பக்கீர் (ஏழ்மை வரையறைக்குள் உள்ளடக்கப்படுபவர்கள்)
2. மிஸ்கீன் (பரம ஏழை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஆமிலூன அலைஹா (ஸகாத் உத்தியோகத்தர்)
4. முஅல்லபதுல் குலூப் (இஸ்லாத்திற்கு இணக்கமானோர்)
5. பிர்ரிகாப் (உரிமைச் சீட்டு எழுதப்பட்ட அடிமை)
6. அல்காரிமூன் (கடன்பட்டோர்)
7. பீஸபீலில்லாஹ் (இறைபாதையில் போராடுவோர்)
8. இப்னுஸபீல் (இஸ்லாம் அனுமதித்த நோக்கங்களிற்காகப் பயணம் மேற்கொண்டு இடைவெளியில் பயணத்தைத் தொடரமுடியாமல் கஷ்டப்படுபவர்கள்)

**(iii) ஸகாத் உதவிபெற முடியாதவர்கள்**

1. செல்வந்தர்கள்
2. உழைக்கும் சக்தி உடையவர்கள்
3. நாஸ்திகர்கள், மதம்மாறியோர், இஸ்லாத்தின் எதிரிகள்
4. ஸகாத் கொடுப்போரின் பிள்ளைகள், பெற்றோர், மனைவி
5. நபிகளாரின் குடும்பத்தார் (பனூஹாஸிம்)

மேலும் ஸகாத் கொடுப்பதன் மூலம் ஆத்மீக லௌகீக பயன்கள் ஏற்படுகின்றன.

**4. நோன்பு (ஸவ்ம்)**

"ஸவ்ம்" என்னும் சொல்லின் மொழிக்கருத்து "தடுத்தல், தவிர்த்தல்" என்பதாகும். இது "ஸலாம்" எனும் வினைச் சொல்லில் இருந்து தோன்றியது. இஸ்லாமிய பிரயோகத்தில் "அதிகாலை வேளையில் இருந்து சூரியன் மறையும் வரை உண்ணாமல், பருகாமல் உடல் உறவில் ஈடுபடாமல் இருத்தல்" இக்காலப்பகுதியில் மனிதன் தனது புலன் உணர்வுகளை அடக்கி வாழ்வதாகும். மேலும் ஏழைகளின் பசியை உணர்வதே நோன்பின் குறிக்கோளாகும். நோன்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்திப் பல அல்குர்ஆன் வசனங்களும், ஹதீஸ்களும் காணப்படுகின்றன.

"ஈமான் கொண்டவரே உங்கள் முன்பிருந்தோர் மீது நோன்பு கடமையாக்கப்பட்டது. போன்று, உங்கள் மீதும் கடமையாக்கப் பட்டுள்ளது." இதன் மூலம் நோன்பின் முக்கியத்துவத்தை விளங்கப் படுத்துவதுடன், மேலும் ஆத்மீக, லௌகீகப் பயன்கள் கிடைக்கப் பெறுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஹஜ்

இஸ்லாமியக் கடமையில் ஹஜ் முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஹஜ் என்னும் சொல்லின் மொழிக்கருத்து "புனித இடத்தை நாடிச்செல்லல்" என்பதாகும். இப்பிரயோகத்தில் ஹஜ் உடைய காலத்தில் மக்காநகர் சென்று சில கிரியைகளை நிறைவேற்றுதல் ஹஜ் எனப்படும்.

ஹஜ்ஜைப்போன்று ஏனைய மதங்களிலும், சமுதாயங்களிலும் புனித யாத்திரைகள் காணப்படுகின்றன.
உ+ம் : பௌத்தர்களின் கபிலவஸ்து, புத்தகயாப் பயணங்கள், இந்துக்கள் காசி, திருப்பதி, யாத்திரைகள், யூத கிறிஸ்தவர்களின் ஜெரூசல யாத்திரை போன்றன.

ஹஜ்ஜை நிறைவேற்றுவதற்கான ஷர்த்துக்கள்

1. முஸ்லீமாக இருத்தல்
2. பருவமடைந்திருத்தல்
3. சித்த சுவாதீனமுள்ளவராக இருத்தல்
4. உடல்நலமுள்ளவராக இருத்தல்
5. போதியகாலமிருத்தல்
6. பொருள், பணவசதி இருத்தல்
7. சுதந்திரமானவராக இருத்தல் போன்றன காணப்படுகின்றன.

மேலும் ஹஜ் நிறைவேற்றப்படுமானால் சில கிரியைகள் செய்யப்பட வேண்டும். அவையாவன,

i. மீகாத் (ஹஜ்ஜுக்கு நிய்யத்து வைத்தல்)
ii. இஹ்ராம் (ஹஜ், உம்ராவிற்காக நிய்யத்து வைக்கும் நிகழ்வாகும்)
iii. தல்பியா

தல்பியா என்பது இஹ்ராம் அணிந்தவர் கஃபாவை சென்றடையும் வரை ஓதிக்கொள்வதாகும்.

iv. தவாப்

கஃபாவை அடையும் ஒருவர் முதன் முதலாக மஸ்ஜிதுல் ஹராமில் நுழைந்தவுடன் கஃபதுல்லாவை 7 முறை வலம்வருதல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

v. மகாமு இப்ராஹிம் என்பது தவாவை முடித்து அவ்விடத்தில் 2 ரகஅத் தொழுவது இது சுன்னத்தாகும்.

vi. ஸம்ஸம்

தவாவையும், மகாமு இப்ராஹிமையும் நிறைவேற்றிய ஒருவர் ஸம்ஸம் கிணற்றுக்கு அருகில் சென்று இந்நீரை அருந்துதல் நன்று:

vii. முல்தஸம்

viii. ஸ.ீ.யி

ix. ஹல்க்

x. மினாவில் தரித்தல்

xi. அரபாலில் தரித்தல்

xii. முஸ்தலிபாவில் தரித்தல்

xiii.மினாவுக்கு மீண்டும் வருதல்

போன்ற கடமைகளில் ஈடுபடுதல் வேண்டும். முக்கியமாக 9ஆம் நாள் அரபாவில் தரித்தல் மிக முக்கியமானதாகும் . இதனையே நபி (ஸல்)அவர்கள்

"அரபாவில் தரித்தலே ஹஜ்ஜாஹு‌ம்" என்று வினவியுள்ளார்கள். மேலும்,

ஜம்ராத் (கல்லெறியும் இடங்கள்)

தவாபுகள் போன்றன காணப்படுகின்றன.

## சடங்குகளும், விழாக்களும்

சடங்குகள் எனப்படும் போது பிரதானமாக திருமணச்சடங்கு, மரணச்சடங்கு என்பவற்றைக் குறிப்பிடலாம். விழாக்கள் எனப்படும் போது நோன்புப் பெருநாள், ஹஜ்ஜுப் பெருநாள், என்பவற்றைக் குறிப்பிடலாம்

1. திருமணச்சடங்கு (நிகாஹ்)

"இஸ்லாம் தனிமனித உருவாக்கத்துடன் நின்று விடுவதில்லை. ஆத்மீக ரீதியாகவும், பண்பாட்டு ரீதியாகவும், தனிமனிதர்களை உருவாக்கி அவர்களின் மூலம் இஸ்லாமியக் குடும்பம், இஸ்லாமிகச் சமூகம் தவறுகளிலிருந்து விடுபட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாகும். எனவே தான் இஸ்லாம் திருமணத்தை அனுமதித்துள்ளது. ஆணாயினும் சரி பெண்ணாயினும் சரி உங்களில் எவருக்கு வாழ்க்கை துணை இல்லாவிட்டால் அவர்களிற்குத் திருமணம் செய்து வையுங்கள்". (குர்ஆன்)

மேலும் நபியவர்கள் "திருமணம் எனது நடைமுறையாகும்; யார் அதனை நிராகரிக்கின்றார்களோ அவர் என்னைச் சார்ந்தவர் அல்லர்" எனக்கூறியுள்ளார்.

### அ. திருமணத்தின் தார்ப்பரியங்கள்

1) பாலியல் உணர்வுகளை நெறிப்படுத்தல்.
2) இனப்பெருக்கம்
3) சமூகப்பிணைப்பு
4) ஆயுள் அதிகரிப்பு

### ஆ. திருமணத்திற்கான அடிப்படை நிபந்தனைகள்

1) மணமகன்
2) மணமகள்
3) வலி (மணமகளின் பொறுப்புதாரி)
4) ஷாகிதைன் (இரு சாட்சிகள்)
5) ஈஜாப் - கபூல் (கொடுக்கல் வாங்கல்)
6) மஹ்ர் (மணமகன் மணமகளிற்கு நன்கொடை)
7) வலீமா - மேலும் திருமணத்தில் திருமணம் முடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டோர் அஜ்னபி எனவும் அனுமதிக்கப்படாதோர் மஹ்ரமி எனவும் குறிப்பிடப்படுவர்.

### இ. மஹ்ரமி பின்வரும் வழிகளில் ஏற்படலாம்

1) நஸபா – (இரத்த உறவு)
2) முஸாஹரா – (திருமண உறவு)
3) ரலாஆ - (பால்குடி உறவு) ஆகும்.

### 2. ஜனாஸா (மரணச்சடங்கு)

இஸ்லாத்தில் மரணித்த உடலை ஜனாஸா என்பர். இந்த ஜனாஸா ஆனது உலகில் தான் செய்த நல்ல விடயங்களிற்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீய செயலிற்கும் அல்லாஹ். அதற்கான கூலியை மறுமையில் வழங்குகின்றான். நபி (ஸல்) அவர்கள் ஒருமுறை அந்நியரின் மரணித்த உடல் வரும்போது தான் எழுந்து நின்று மரியாதை செய்தார்கள். இவ்வாறான செயலை ஸஹாபாக்களுக்கும் முஸ்லிம் சமுதாயத்திற்கும் நபியவர்கள் செய்யுமாறு வலியுறுத்தினார்கள். மேலும் நபி (ஸல்) அவர்களும் ஸஹாபாக்களும் ஒரு யூதனுடைய ஜனாஸாவின் ஊர்வலத்தில் கூட சென்று கலந்து கொண்டனர். இதன் மூலம் ஏனைய மதத்தவரின் ஜனாஸாவிற்கும் மரியாதை செய்யவேண்டுமென்பது புலப்படுகின்றது.

ஜனாஸாவிற்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகள்

1. குளிப்பாட்டல் :- உடலைச் சுத்தம் செய்தல். ஆண்களிற்கு ஆண்கள், பெண்களிற்குப் பெண்கள் இக்கடமையை நிறைவேற்றுவர்.
2. கபனிடுதல் :- குளிப்பாட்டிய உடலை துணியினால் முழுமையாக மூடுவதை இது குறிக்கும்.
3. ஜனாஸாவிற்குரிய கடமையினை நிறைவேற்றல்
   மரணித்தவரது பிள்ளைகள் அல்லது உறவினர்கள் இக்கடமையை நிறைவேற்ற வேண்டும். இதன்போது ஜனாஸாவிற்குரிய கட்டாயக் கடமையாகிய ஜனாஸா தொழுகை நடாத்தி வைக்கப்படும். இந்தத் தொழுகையில் மரணச் சடங்கில் கலந்து கொண்ட சகல ஆண்களும் பள்ளிவாசலுக்குச் சென்று நிறைவேற்றுவர்.
4. தொழுகையை முழுமையாக நிறைவேற்றுதல்.
5. அடக்கம் செய்தல் :- மரணித்தவரது உடலை அதிக நேரமோ காலமோ உட்படுத்தாது விரைவாகச் சென்று நல்லடக்கம் செய்வது கட்டாயக் கடமையாகும்.

**விழாக்கள்**

1) நோன்புப் பெருநாள்

இப்பண்டிகையானது றம்ழான் மாதங்களில் கொண்டாடப் படுகிறது. அதாவது றம்ழான் மாதம் 3ஆம் பிறையன்று ஆரம்பித்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30 நாட்கள்வரை விரதம் அனுஷ்டித்து அதன்பின்னர் இப்பண்டிகை கொண்டாடப்படுகின்றது. இந்நாளில் புத்தாடை அணிந்து, புதுமணம் பூசி, சகல முஸ்லிம்களும் பள்ளிவாசலுக்குச் சென்று பெருநாள் தொழுகையை நிறை வேற்றுவார்கள்.

2) ஹஜ்ஜுப் பெருநாள்

இவ்விழா வசதி படைத்தவர்கள் மக்காவிற்கு சென்று ஹஜ் கடமையை நிறைவேற்றியதன் பின்னர் கொண்டாடப்படுகின்ற ஒரு பெருவிழாவாக இது காணப்படுகின்றது. இதன்போது வசதி படைத்தவர்கள் குர்பான் மேற்கொள்கின்றனர். அதாவது ஆடு, மாடு, ஒட்டகம் போன்றவற்றை அறுத்து மக்களுக்கு பகிர்ந்தளிப்பார்கள்.

## அடிப்படைக்கோட்பாடுகள் (ஏகத்துவம்)

இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகளில் முதலிடத்தைப் பெறுவது ஏகத்துவமாகும். அல்லாஹ் ஒருவன், அவனே அனைத்தையும் படைத்துப் பரிபாலிப்பவன், இணையற்றவன், ஏகன், தனித்தவன், இணைதுணை அற்றவன். எமது அனைத்துத் தேவைகளையும் அவனிடமே கோர வேண்டும் என்பதன் அடிப்படையில் அமைந்ததே ஏகத்துவக் கோட்பாடு ஆகும். இஸ்லாத்தின், அனைத்தும் இதன் அடிப்படையிலேயே அமைந்து கொண்டிருக்கின்றன.

ஏகத்துவக் கோட்பாடானது நம்பிக்கையுடன் மட்டும் நின்றுவிடாது எமது செயல் மூலம் இறைவனின் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நாம் எல்லாம் கண்ணியமிக்க இறைவனுக்கு இணைவைப்பதைத் தவிர்த்து வாழ்வதே ஏகத்துவக் கோட்பாட்டின் கருத்தாகும். இறைவன் வழிகாட்ட நபிமார்களை அனுப்பி மக்களை நேர்வழிப்படுத்தினான். அவன் மனிதனைச் சில நோக்கங்களிற்காகவே படைத்துள்ளான். நோக்கங்களையும், வழியையும் இறைத்தூதர்கள் மூலம் போதித்தான். மனிதன் இறைவனாகவோ, இறைவன் மனிதனாகவோ ஆவதில்லை. ஆத்மீக ரிதியாகவே மனிதன் இறைவனைத் தொடர்பு கொள்கின்றான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் ஏகத்துவத்தைப் பிரதிபலிக்கும் செயல்களாக கலிமா, தொழுகை, ஸக்காத், நோன்பு, ஹஜ் என்பன காணப்படுகின்றன.

**மூல நூல்கள்**

இஸ்லாத்தின் சிறப்பு பற்றியும், கோட்பாடு பற்றியும் அறிந்து கொள்வதற்கு மிகப் பிரதான மூல நூல்களாக அல்குர்ஆன், அல்ஹதீஸ் விளங்குகின்றன. இவை மனிதர்களுக்கு வழிகாட்டியாகவும், போதனை வழங்குவதாகவும் , அமைந்தவை இதன் மூலம் தீர்வு பெற்றுக்கொள்ளலாம்.

அத்துடன் தற்காலத்தில் நிலவிவரும் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கியாக இஜ்மா, கியாஸ் போன்ற துணை மூலாதாரங்கள் காணப்படுகின்றன.

இம்மூல நூல்களே இஸ்லாத்தில் எழும் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கியாகக் காணப்படுகின்றன.

இம்மூல நூல்களை நோக்குவோமாயின்...

**அ. அல்குர்ஆன்**

இஸ்லாத்தின் பிரதான மூலநூலாக (வேதமாக) அல்குர்ஆன் காணப்படுகிறது. அல்குர்ஆன் முதலாவதாக ஹிராக் குகையில் வைத்து ஜிப்ரில் (அலை) மூலம், முஹம்மது நபி(ஸல்) அவர்களுக்கு அருளப்பட்டது. இது இஸ்லாத்தின் முதல் வஹியாகும். இதன் பின் படிப்படியாக நபி (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ்வால் அல்குர்ஆன் இறக்கி அருளப்பட்டது. அல்குர்ஆன் அன்று முதல் இன்று வரை எழுந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதாகவும் இனிவரும் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கியதாகவும் காணப்படுகின்றது.

இவ் அல்குர்ஆன் 30 ஜுஸுக்களையும், 114 சூராக்களையும் 6666 வசனங்களையும் கொண்டது. இதுவே இஸ்லாம் சமயத்தைப் பின்பற்ற இறைவனால் நபியவர்கள் மூலம் மனிதருக்கு தந்து அருளப்பட்ட மிகப் பிரதான நூலாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆ. அல் ஹதீஸ்

அல்ஹுதீஸ் என்பது முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை முறையாகும். இது நபி (ஸல்) அவர்களின் சொல், செயல், அங்கீகாரம் போன்றவற்றைக் குறிக்கும். முஸ்லீமானவன் இவ்வாறுதான் நடக்க வேண்டும். இப்படித்தான் வாழவேண்டும் என்பதை இந்த ஹுதீஸானது மிகத் தெளிவாக விளக்குகின்றது.

அல்குர்ஆன் போன்றே அன்று முதல் இன்று வரை எழும் பிரச்சினைகளுக்குத் தீர்வாக விளங்குகின்றது. மேலும் முஹம்மது நபியின் காலத்திற்குப் பின் இஸ்லாத்தை நிலைநாட்டிய அறிஞர்கள், எழும் நவீன பிரச்சினைகளுக்கு குர்ஆன், ஹுதீஸை மையமாகக் கொண்டு தீர்வு கண்டனர். இக்கால அறிஞர்கள் இஜ்மா, கியாஸ் போன்ற சட்டமூலாதாரங்களையும் தீர்வு வழங்கப் பயன்படுத்துகிறார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்த மதசாரம்



இலங்கையின் பெரும்பான்மை இனத்தவர்களாகிய சிங்களவர்களால் பின்பற்றப்படுகின்ற மதமாக பௌத்தமதம் (புத்ததர்மம்) காணப்படுகின்றது. இதனைத் தோற்றுவித்தவர் கௌதம புத்தராவார். இவர்களின் வழிபாட்டுத் தலங்களாக விகாரைகள் காணப்படுகின்றன. இவர்கள் தமது சமயத்தின் முதன்மை நூல்களாக திரிபீடகம், தம்மபதம் போன்ற நூல்களை ஏற்றுக்கொள்கின்றனர். எனவே இவ்வாறு விளங்கும் பௌத்த சமயத்தின் தோற்றம், வழிபாட்டு முறைகள், தினங்கள், விழாக்கள், அடிப்படைக்கோட்பாடுகள், முக்கிய நூல்கள் ஆகியவை தொடர்பாக ஆராய்வோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தோற்றமும், வளர்ச்சியும்**

புத்ததர்மம் தோன்றிய முறைபற்றி முதலில் நோக்குவோமாயின் இதன் மூலகர்த்தாவாக புத்தர் விளங்குகின்றார். புத்தர் என்பதன் கருத்து "ஞானஒளி" கைவரப்பெற்றவர் என்பதாகும். இவர்கள் தாமே நான்கு சூரியசத்தியங்களை உணர்ந்து அவற்றை உலகிற்கு அளித்தவர்கள், 28 புத்தர்கள் ஆவார். இவர்கள் காலத்துக்குக் காலம் தோன்றி பௌத்த இலக்கியங்களை அழியவிடாது பாதுகாத்து வந்துள்ளனர் என பௌத்த இலக்கியங்கள் கூறுகின்றன. அத்துடன் இவர்கள் அனைவரும் ஒரே கொள்கையைப் போதித்து வந்துள்ளனர். இன்று நிலவும் புத்தசமயம் 28ஆம் புத்தராகிய கௌதமபுத்தரால் போதிக்கப்பட்டது. அந்தவகையில் இறுதி புத்தராகிய கௌதம புத்தரால் போதிக்கப்பட்டவையே பௌத்தத்தின் கொள்கைகளாக நிலவுகின்றன. இவர் இமயமலையின் சாரலில் உள்ள சாக்கிய நாட்டின் நகரமாகிய கபிலவஸ்துவில் கி.பி 623 இல் போதிசத்துவராக சுத்தோதன மன்னனுக்கும் மகாமாயாதேவி என்பவருக்கும் மகனாக வைகாசி பூரண தினத்தன்று அவதரித்தார். இவர் சர்வவல்லமையுடைய கடவுளும் அல்லர். கடவுளின் அல்லது பிரம்மாவின் பிரதிநிதியும் அல்லர். அவர் ஒரு மனிதனே மனோசக்தியை திறம்பட வளர்த்தெடுத்துத் தாமாகவே சத்தியத்தையும் உண்மையையும் உணர்ந்து பூரணநிலையை எய்திய பெருமைக் குரியவராவார். இவ்வாறு புத்தநிலையை அடைய விரும்பும் ஒருவர் போதிசத்துவர் அல்லது விழையும் புத்தர் எனப்படுவர். இவர் அவதரித்த விடயம் தொடர்பாக ரும்மித்தேயி கல்வெட்டில் "சாக்கியமுனி அவதரித்த இடம் இதுவே" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனைப் பொறித்தவர் அசோகச்சக்கரவர்த்தி ஆவார். இதனைத் தற்போது உற்றுநோக்குகையில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு அவதரித்த புத்தருக்கு பிறந்து ஐந்தாவது நாளன்று பெயரிடும் விழாவை குடும்பத்தார் கொண்டாடினர். அந்த வேளையில் கல்வி வேள்விகளில் சிறந்து விளங்கிய பல அந்தணர்கள் இவருக்குரிய ஜாதகத்தைப் பலவிதமாக கூறியபோதும் "கௌண்டினி" என்ற அந்தணரே அவரை அவதானித்து, சகல உலகத்தையும் ஆளும் சக்கரவர்த்தி ஆவான் அல்லது ஒரு புத்தர் ஆவான் என ஜாதக பலனைக் கூறி சித்தார்த்தன் எனப் பெயரிட்டான். சித்தார்த்தன் பிறந்து ஏழாவது நாள் தாயார் மரணம் அடைந்தார் அதன் பின் சுத்தோதனன் தனது மனைவியின் சகோதரியான பிரசாவாதியை தனது இரண்டாம் மனைவியாக ஏற்றுக் குழந்தையை இருவரும் வளர்த்து வந்தனர்.

இவ்வாறு வளர்த்து வந்த சித்தார்த்தனுக்கு சுகபோகங்களை மாத்திரமே வழங்குவதற்கு அரசன் பலவாறான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தான். இதனால் இவன் வாழ்க்கையின் துன்பப் பகுதியை அறியாமலே வளர்ந்து பதினாறு வயதை எட்டினான். அவ்வேளையில் அழகும், குணமும் நிறைந்த அரசகுமாரி யசோதரையை திருமணம் செய்தான். பின்பு சுகபோகங்களை அனுபவிப்பதற்காக பூங்காவிற்கு செல்லும்போது வாழ்க்கையின் உண்மைகளை நேரடியாக தரிசிக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. அதாவது பணியாளர்களையும், முதுமைப் பருவத்தினரையும், பிணங்களையும் சந்தித்த அவர் சிந்தனையில் ஈடுபட்டார். இதன் முடிவாக வாழ்வில் கொடிய நிலையில் இருந்து விடுபடும் முறையான துறவு வாழ்க்கையை மேற்கொள்வதே பயன்தரும் மார்க்கம் என்ற முடிவிற்கு புத்தர் வந்தார். தனது 29வது வயதில் யசோதரை இராகுலனைப் பெற்ற அதே தினத்தில் அரச போகங்களையும் வீட்டையும் துறந்து செல்ல முடிவு செய்தார். தனது மனைவியிடத்திலும், மகனிடத்திலும் பெரும் கருணை உடையவராக விளங்கிய அவர் அதேவேளை அப்பெரும் கருணையை உலகில் உள்ள ஜீவராசிகள் அனைத்திடமும் அவர் அன்பு செலுத்தலாயினார். துன்பத்தில் இருந்து அவர்கள் அனைவரையும் காப்பாற்றும் மார்க்கத்தை காண்பதே அவரது குறிக்கோளாக இருந்தது. இந்நாள் "எசல முழுநோன்மதி"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினத்திரவில் (ஆடிமாத பூரணை நாள் இரவு) மேற்கொள்ளப்பட்டது. போதிசத்துவராகிய கௌதம புத்தர் இல்வாழ்க்கையை விட்டு நீங்கிய இப்பெரும் துறவு "மகாபி நிஷசிரவணம்" எனச் சொல்லப்படுகின்றது.

இவ்வாறு துறவு வாழ்க்கையை மேற்கொண்ட போதிசத்துவரது காலகட்டத்தில் ஜம்புது வீயூபத்தில் (இந்தியா) வீடுபேற்றின் நிமிர்த்தம் சாதனையில் ஈடுபட்ட துறவிகள் பலர் இருந்தனர். அவர்களுள் சிலர் தம்மைப் பின்பற்றும் சீடர்கள் அடங்கிய கூட்டங்களுடன் விளங்கினார். சிலர் தமது மனங்களை வளப்படுத்தி மனத்தின் உயர்நிலைகளை தேடுவதில் ஈடுபட்டார். பார்கவர், ஆலாரகாலமார், உத்தகராமபுத்தர் போன்ற முனிவர்களை அடைந்து அவர் பாவனையில் ஈடுபட்டார்.

எனினும் நாடிய பேற்றை அவர்களது போதனைகளில் இருந்து பெறவில்லை. அவர் நாடியது பரிநிர்வாணம். இங்கு பிறப்பும் இல்லை, இறப்பும் இல்லை. எனவே நிர்வாணம் எய்துவதற்கு விடுதலை அடைய வேண்டும் என முடிவு செய்தார். இத்துறவிகளின் கொள்கைகள் அனைத்தும் இவருடைய சிந்தனையுடன் முழுமையாக ஒன்றித்து செல்லாததினால் நாம் தனியாகவே முயலவேண்டும் என முடிவு செய்து துறவியின் கடும் தவங்களுடன் பரிசோதனை செய்யலாம் எனக்கருதினார். இதற்காக உருவில்லா கிராமத்தில் நைரஞ்சனா ஆற்றங்கரையில் ஓர் உபவனம் ஒன்றைத் தேர்ந்தெடுத்தார். இதன்போது அவர் ஆறு ஆண்டு காலம் உணவு ஆகாரங்களைச் சுருக்கி, தவத்தில் ஈடுபட்டு பின்னர் உணவையே மறந்து தவம் செய்தார். இந்த நிலையில் அவர் பயின்ற தியான முறை அனுபான சக்தியாகும். மனத்தை மூக்கின் பூரகத்திலும், ரேசகத்திலும் ஒருமுகப்படுத்தும் முறையே இதுவாகும். தமது மனத்தை இவ்வாறு பயன்படுத்திக்கொண்டு கயாஷேத்திரத்தை அமைத்து இதனால் உடல் நலிவுற்று தவம் செய்ய முடியாமல் போவதையும் இதனால் மனதையும் பண்படுத்த முடியாது என்பதை அறிந்து போதிய உணவுகளை உட்கொண்டு தியானத்தின் மூலம் மனதை பண்படுத்த தொடங்கி உறுதியான மனதுடன் கயாஷேத்திரத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள வெள்ளரசுமரம் ஒன்றின் கீழ் உட்கார்ந்து பூரணமான ஞானோதயம் (புத்தநிலை) எய்தும் வரை உறுதி கொண்ட இவர் ஆறு ஆண்டின் முடிவான வைகாசி பூரணை தினத்தன்று மாலை தான் நினைத்தவற்றை பெற்று உணர்ந்து துறவியான இச்சித்தார்த்தர் கௌதம புத்தநிலையை எய்தினார். இது கி.பி 588 இல் (35 வயதில்) நிகழ்ந்தது.

இவ்வாறு புத்தநிலையை எய்திய இவர் கௌண்டியர், வாஷபர், மகாநாமன், பத்திரிகர், அஸ்ஸகி ஆகியவர்களுக்கு தனது முதல் உபதேசத்ததை வழங்கினார். இதனால் அவர்கள் அருகந்த நிலையை (மனமாசுக்களை ஒழித்து உண்மையை உணர்ந்தவன்) எய்தி இவரின் சீடர்களாக சங்கத்தில் சேர்ந்தனர். இவ்வாறே புத்த சங்கமம் ஆரம்பமானது.

பின்பு தனது ஐந்து பிக்குகளுடன் காசியில் இசிபத்தனையில் தொடங்கிய பௌத்த சமயச்சங்கம் மழைக்காலம்தொடங்கி 3 மாதத் துக்குள் அறுபதாக அதிகரித்தது. இவ் ஐவரும் அறுபத்தின்மராக மாறி புத்த தர்மத்தை பரப்புவதற்கு நான்கு திசைகளுக்கும் சென்றனர். இதில் கௌதம புத்தரும் ஈடுபட்டார். இதனால் அனைத்து வகையினரும் சீடர்களும் பிக்குகளாக அனுமதிக்கப்பட்டனர். சாதியையோ, குடும்பப்பிரிவையோ, சமுதாய அந்தஸ்தையோ நோக்காது சென்று மார்க்கத்தை போதித்தார். பௌத்த சங்கம் எண்ணிக்கையில் அதிகரித்தபோது அரசர்களும், கோடிஸ்வரர்களும் அவர்களுக்காக வீடுகளையும், ஆச்சிரமங்களையும் கட்டிக் கொடுத்தனர். புத்தர் அதனை பொதுச்சொத்தாக்கிக் கொள்கைகளைப் பரப்புவதற்கு ஈடுபட்டார். இவ்வாறு கௌதம புத்தர் பல இடங்களிற்கு சென்றதாகக் கூறப்படுகின்றன. அந்தவகையில் இலங்கைக்கு மூன்று முறை வந்ததாகவும், இலங்கை சரித்திரநூல்கள் கூறுகின்றது. இவ்வாறு வாழ்ந்து வந்த புத்தர் தனது எண்பதாவது வயதில் குசிநகரில் அரசருக்குரிய மரச்சோலையில் பரிநிர்வாணம் அடைந்தார். இவ்வாறு கி.பி 543 இல் நிகழ்ந்த பரிநிர்வாணத்துடனே பௌத்த சகாப்தம் தொடங்குகின்றது. பௌத்த சகாப்தத்தின்படி இவ்வாண்டு 2532 ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழிபாட்டு முறைகள்

பௌத்த மதத்தின் வழிபாடுகளைப் பற்றி அறிவதற்கு தாதுகோபம் (ஸ்தூபம்), அரசமரம், புத்தர்சிலை ஆகிய மூன்று புனிதப் பொருட்கள் காணப்படுகின்றன. இவைகள் புத்தரின் குறிகளை குறிக்கின்ற பொருட்களாக கூறப்படுகின்றன. இதில் காணப்படும் அரசமரத்தை போதி விருட்சம் என அழைப்பர். காரணம் "தனது அடியிலிருந்து ஆசாரியார் போதி எய்த, ஞானம் அடைய உதவியது" ஆகும். அநுராதபுரத்தில் உள்ள ருவான்வெலிசாய, அவுக்கனவில் உள்ள புத்தர் சிலை போன்றனவும் புத்தருடன் மிக நெருங்கிய தொடர்பு உள்ளதால் இவற்றையும் மதிப்புக்குரிய பொருட்கள் என ஏற்று பௌத்த மக்கள் வழிபடுகின்றனர். அத்துடன் பௌத்த விழாக்களில் பயன்படும் ஆறு வர்ணங்களைக் கொண்ட கொடி ஒன்றும் உள்ளது. இக்கொடி புத்தரின் உடம்பிலிருந்து வெளிவரும் ஆறு வர்ணம் கலந்த ஒலி வீச்சைக் (சட்ட வர்ண புத்தரஸ்மி) குறிக்கின்றது.

இவற்றுடன் அனுட்டானம் பெறாத பௌத்தர்கள். மும்மணிகளிடம் சரணடைந்து நோன்மதி தினங்களில் பஞ்ச சீலம், அட்ட சீலம், தச சீலம், போன்ற ஒழுக்கவியல் முறைகளை பின்பற்றி வழிபடுபவரை பௌத்தர்கள் "உபாசகன்" என அழைப்பர். இவ் ஒழுக்கவியல் வளர்ச்சியின்படி நிர்வாணத்தை அடையும் மார்க்கத்தில் ஒழுக்கம் (சீலம்), ஏகாக்கிரகம் (சமாதி), மதிநலம் (பிரஞ்ஞை) என்னும் மூன்று நிலை உள்ளன. இந்நிலையை எய்து ஏகாக்கிரக மதிநலத்தை அடைந்து அதன் மூலமே சத்திய அனுபூதி ஏற்படுகின்றது. இவ்வாறு இம்மத வழிபாட்டு முறைகள் காணப்படுகின்றன.

## தினங்களும், விழாக்களும்

பௌத்த தினங்களும் விழாக்களும் பற்றி நோக்கும்பொழுது இவர்களின் செயற்பாடுகள் பெரும்பாலும் முழு நோன்மதி தினங்களிலேயே நடைபெறுகின்றது.

இலங்கையில் முழு நோன்மதி தினங்கள். பூரண விடுமுறை நாளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. முழு நோன்மதி தினங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டசீலங்களை பின்பற்றுகின்றனர். அந்தவகையில் வெசாக் முழு நோன்மதி தினம், பொசன் முழு நோன்மதி தினம், எசல முழு நோன்மதி தினம், உந்துதல் முழு நோன்மதி தினம் ஆகிய தினங்கள் காணப்படுகின்றன.

### அ. வெசாக் முழு நோன்மதி தினம்

உலக பௌத்தர்கள் யாவரும் கொண்டாடும் முக்கிய தினமாக இந்நாளை கருதுகின்றனர். இது வைகாசி மாதத்திலே வருகின்றது. கி.பி 3ம் நூற்றாண்டில் ஒரு பொசன் முழு நோன்மதி தினத்தன்று தான் இந்திய அசோகச்சக்கரவர்த்தியின் மகனான அருகதமகிந்தனை தலைவராகக் கொண்ட பௌத்த சமயம் பரப்பும் குழுவொன்று இலங்கைக்கு வருகை தந்து இலங்கையில் பௌத்த சமயத்தை உத்தியோக பூர்வ முறையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்போது அட்டசீலங்களைப் பின்பற்றுதல், தானமடங்களை அமைத்துத் தானம் வழங்குதல், வெசாக் பந்தல்கள் அமைத்தல், வெசாக் கூடுகளை உருவாக்குதல், ஆலோக பூசை (ஒளிப்பூசை) செய்தல் போன்ற நிகழ்ச்சிகளும் புத்தரின் வாழ்க்கையுடன் தொடர்புபடுத்தப்பட்டு அமைக்கப்படும். இத்தினத்திலேதான் புத்தரின் வாழ்க்கையில் ஏற்பட்ட அவரின் பிறப்பு, அவர் சம்போதி ஞானம் பெற்று புத்த நிலை எய்தி அவர் பரிநிர்வாணம் அடைந்தது போன்ற சம்பாசணைகள் நடைபெற்றதாகத் தெரியவருகின்றது.

### ஆ. பொசன் முழு நோன்மதி தினம்

இது இலங்கையில் பௌத்தர்களுக்கு மிகவும் முக்கியமான தினமாகும். ஏனெனில் இத்தினத்திலேயே தான் பௌத்த கலாசாரம் இலங்கையில் பரவத் தொடங்கியது. இத்தினத்தில் தான் மிகிந்தலை மலையில் இலங்கையில் தீட்சை பெறாத பௌத்தர்,சீடர்களாக மாறினார். இத்தினம் வெசாக் முழு நோன்மதி தினத்திற்கு அடுத்தபடியாகவும் கொள்ளப்படுகின்றன. இதன்போது பௌத்தர்கள் அநுராதபுரத்திற்கு வரும்போதுமிகிந்தலைக்கு யாத்திரை செய்தல், உலபோசதசீலத்தை பின்பற்றுதல். தானம் வழங்குதல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரஹறராவை ஒழுங்கு செய்தல் போன்றவற்றை அருகதமகிந்தர் இலங்கையில் காலடிவைத்த ஞாபகார்த்தமாக ஒழுங்குசெய்வார்.

### இ. எசல முழுநோன்மதி தினம்

இத்தினத்தை ஆவணி மாதத்தில் கொண்டாடுவர். இதன் சிறப்பு யாது எனின், மகாமாயாதேவியின் கருப்பையில் அரசகுமாரன் சித்தாத்தர் கருவுற்றது. "மகாவி நிஷ்சிரமணம் என்னும் சித்தார்த்தரின் பெரும் துறவு, புத்தர் வழங்கிய முதலாவது உபதேசம் போன்றன இடம்பெற்றவையாகும். இத்தினத்தில் இலங்கையின் பெரஹறராக்களை ஒழுங்கு செய்தல். பொதுவான ஒரு விடயம் ஆகும். அதிலும் கண்டியில் நிகழும் எசல பெரஹறா சிறப்புப் பெற்றது.

### ஈ. உந்துவ முழு நோன்மதி தினம்

இத்தினம் இலங்கை பௌத்த சரித்திரத்தில் முக்கிய தினமாகும். காரணம் இத்தினத்தில் தான் அருகத மகிந்தனின் சகோதரரின் பௌத்த பிக்குனி சங்கமித்தை. புத்தகாயாவில் எந்த வெள்ளரசு மரத்தின் அடியில் புத்தர் சம்போதி ஞானம் எய்தினாரோ அப்பெரும் விருட்சத்தின்கன்றுச்செடியுடன் இலங்கை வந்திருந்தார். இத்தினம் மார்கழி மாதத்திலே வரும் இதன்போது இலங்கையின் பல பௌத்த தலங்களில் சங்கமித்தை சிலை ஒன்று ஊர்வலமாக எடுத்துச் செல்வது வழக்கம் சங்கமித்தையால் கொண்டு வரப்பட்ட மரச்செடி மகாவிகாரை வளாகத்தில் நடப்பட்டுள்ளது. இன்றும் அம்மரம் அங்கு நிற்கின்றது. இந்நிகழ்ச்சியின் ஞாபகார்த்தமாகவே இலங்கையின் சங்கமித்தை பௌத்தபிக்குனிகள் சங்கத்தை தொடக்கி வைத்தனர்.

## அடிப்படைக்கோட்பாடுகள்

பௌத்த தர்மத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் பற்றி நோக்குகின்றபொழுது புத்த பெருமான் தமது ஐந்து துறவிகளுக்கும் போதித்த விடயங்களே பௌத்த தர்மக் கோட்பாடுகளை விளக்குகின்றன. அது நான்கு ஆரியச் சத்தியங்களை மிகமுக்கியமாகக் கொண்டுள்ளது. அவையாவன:

i) துக்கம் உளது எனும் ஆரியச் சத்தியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii) துக்க உற்பத்தி என்னும் ஆரியச் சத்தியம்
iii) . துக்க நிவாரணம் உளது எனும் ஆரியச் சத்தியம்
iv) துக்க நிவாரண மார்க்கம் உளது ஆரியச் சத்தியம்

I. துக்கம் உளது என்னும் ஆரியச் சத்தியம் பௌத்தத்தின்படி உலகோடும், வாழ்வோடும் தொடர்புடையன யாவும் மாறுதன்மையென கூறப்பட்டுள்ளது.

II. துக்க உற்பத்தி உளது என்னும் ஆரியச் சத்தியம் துன்பங் களுக்கு காரணம் அல்லது. உற்பத்தி, பிறப்பு என்னும் வித்தாசிய அவா இரண்டாவது வாய்மையாகக் கூறுகின்றது.

III. துக்க நிவாரணம் உளது என்பது. இந்த துக்கம் நீங்கப் பெறுதல் வேண்டும். தன்னிடத்தில் உண்டான ஆசையை அகற்றி அதை தன்மீது பற்றுக்கொள்ளாமல் பிரித்துக் கொள்ளுதல். மேலும் பற்று வந்து பீடிக்காமல் அழித்தலினால் உண்டாக்கும்.

IV. துக்க நிவாரணம் என்பது துக்க நிவாரணத்துக்கு வழிப்படுத்தும் மார்க்கம் பௌத்தத்தில் மதயம மார்க்கம் எனப்படும். மேலும் பௌத்தத்தில் இறுதிக் குறிக்கோளாகிய நிர்வாணத்திற்கு ஒருவரை ஆரிய நான்கு சத்தியங்களில் அழைத்தும் கொள்ளு கின்றது. இவை தவிர்ந்த வேறு போதனைகளும் உண்டு. அது பிரதித்ய சமூத்பாதம் என்ற கோட்பாடு காரண காரிய விதிக் கோட்பாட்டின் மூலம் பொருட்களின் தோற்றம் பற்றியும் குறிப் பிடுகின்றார். மற்றொரு கொள்கையாக செயல்களும் அவற்றின் விளைவுகளும் பற்றிக் குறிப்பிடுகின்றது.

பௌத்தமதத்தில் வேறு ஒரு முக்கிய போதனை என்னவெனில் அறச் செயல்களும் அவற்றின் விளைவுகளும் பற்றிய கொள்கையாகும்.

ஒருவன் தான் ஆற்றிய திறமையான அல்லது திறமையற்ற செயல்களுக்கு ஏற்ற சந்தோசமான நிலையில்,துக்ககரமான நிலையில் மீண்டும் பிறப்பான் என பௌத்தம் வற்புறுத்துகிறது.

எனவே தான் ஒருவர் தனது விமோசனத்திற்கு தானே பொறுப்பாளி ஆகின்றான். வேறொருவரும் பொறுப்பாளி அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது சீடர்கள் தம்மையே பரிசோதித்து வினாவி ஆராய்தல் வேண்டும் என்பதே புத்தரின் கருத்தாக இருந்தது.

இதன் மூலம் அது மறுபிறப்பு பற்றிய கொள்கையை ஏற்கின்றது. இதன்மூலம் பௌத்தம் நிர்வாணம் என்னும் ஆனந்தநிலையை எய்யும்வரை பயனுடைய உலகில் வாழ்க்கையை சரியான முறையினில் வாழ்வதற்கு பௌத்த தர்மம் வழிகாட்டுகிறது. மேலும் மக்களை அவ்வாறு சந்தோசமாகவும், உடல் சுகத்தோடும் பேணலாம் என்பதுடன், நிர்வாணத்தினருக்கான அறிவுரைகளையும் வலியுறுத்தி நிற்கின்றது. அத்துடன், பெண்களும் ஆண்களைப் போல் மதிக்கப்பட வேண்டும் எனவும், யாவரும் கல்வி கற்க வேண்டும் எனவும் வலியுறுத்தியதுடன், பிறப்பில் எவரும் கீழ்ச்சாதி, மேல்ச்சாதி என அமைவதில்லை, அவை செய்கையினாலே அவ்வாறு மாறுகின்றன எனவும் பல கோட்பாடுகளை முன்வைத்தார். இவர் அவ்வாறு முன்வைத்த அனைத்துக் கோட்பாடுகளும் பௌத்த மதத்தின் அடிப்படைக் கொள்கையாக விளங்குகின்றன.

## மூல நூல்கள்


பௌத்த தர்மத்தின் முக்கிய நூல்களை நோக்கும் வேளையில் புத்தபெருமான் போதித்த விடயங்களும் கூறிய கருத்துக்களும் தொகுக்கப்பட்டு விரிவாக்கப்பட்டு பௌத்த மதத்தின் பண்பாட்டுக்கு பயன்படுத்துபவரை குறிப்பிடுகின்றன. அந்தவகையில் புத்தர் பௌத்த தர்மத்தை அருக்கதராகிய அவரது சீடர்களுக்கு மாகரிமொழியென அழைக்கப்பட்ட பாளி மொழியிலேயே உபதேசித்தார். இவ்விடயங்களை புத்தர் பரிநிர்வாணம் அடைந்ததன் பின் அவரது சீடர்களால் தொடுக்கப்பட்டு அவற்றை "தீரிபீடகம்" என்று அழைத்தனர். இத்தீரிபீடகம் சூத்திர தீரிபீடகம், வினைய தீரிபீடகம், அபிநம்ப பீடகம் என மூன்று பகுதிகளைக் கொண்டு விளங்கின இவைதவிர பௌத்தர்களிடையே ஜனரஞ்சகமாக தம்மபதம், யாதக நூல் என்னும் இரண்டு நூல்கள் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மபதத்தில் புத்தருடைய உபதேசங்களில் உள்ள முக்கிய விடயங்களில் செய்யுள் வடிவில் 26 அதிகாரங்களில் பாளிமொழியில் 423 செய்யுள்களில் அமைக்கப்பட்டுள்ளது. இது பௌத்த நூல்களில் அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூலாகவும் கொள்ளப்படுகின்றது.

ஜாதக நூலை நோக்குகின்ற வேளையில் புத்தரின் முன்னைய பிறவிகள் பற்றிய தொகுப்பாகவே விளங்குகின்றது. இதுவும் பாளி மொழியில் எழுதப்பட்டு பின்னர் சிங்கள மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது. இதனால் இந்நூல் சிங்களத்தில் "பன்ஸிய பனஸ் ஜாதகைய" என அழைக்கப்பட்டது. இப்பேரின் அர்த்தம் 550 பிறப்புக்களில் கதைகள் உள்ள நூல்கள் ஆகும். இருந்தும் இந்த நவீன நூலில் 547 கதைகளே உள்ளன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதம்சார் சிந்தனைத்துளிகள்

ஓ. உலகில் ஒரே ஒரு மதம் தான் இருக்கிறது. ஆனால் நூற்றுக் கணக்கான மொழிபெயர்ப்புக்கள் வடிவில் இருக்கிறது. (பெர்னாட்ஷா)

ஓ. ஒரு மதத்திலே மூர்க்கத்தனமாக இருப்பது மதத்தையே தூஷணை செய்வது ஆகும்.

ஓ. மதம் என்பது கடவுளுக்கும் மனிதனுக்கும் அன்பு செலுத்து வதேயன்றி வேறொன்றுமில்லை. (வில்லியம் பென்)

ஓ. ஒவ்வொரு மதமும் மனிதன் என்ற வஸ்துவிலிருந்து தான் கடவுளை வெளிப்படுத்துகிறது அதைக் கடவுள் தான் எல்லோருக்கும் ஊக்கமளிக்கின்றார். (விவேகானந்தர்)

ஓ. மிக நல்ல மதம் அதிகச் சகிப்புத் தன்மை கொண்டது. (ஜிரார்டின்)

ஓ. பசுக்கள் எந்த நிறமானாலும் பால் வெள்ளை. மலர்கள் பலவகையானாலும் பூஜை ஒன்றுதான் மதங்கள் பலவானாலும் இறைவன் ஒருவன் தான்.

ஓ. நல்ல மனச்சாட்சிதான் கடவுளின் கண்.

ஓ. உனது உதடுகளால் சொல்வதை விட, வாழ்வால் நல்ல பிரசங்கத்தை ஆற்ற முடியும்.

ஓ. சமயம் கூறும் சன்மார்க்க நெறியைச் செயலில் காட்டு

ஓ. புத்தகங்களை மட்டும் படித்துத் தத்துவத்தைப் பெறமுடியாது. அது ஆன்மாவின் உள்ளிருந்தும் வர வேண்டும்.

ஓ. படிப்பறிவினால் பெறப்படும் பேரறிவைக் காட்டிலும் பட்டறிவால் பெறப்படும் ஞானமே மேலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்

- சைவம் என்பதன் பொருள் : தொலைக்கல்வித்துறை தேசிய கல்வி நிறுவகம் : மகரகம : (1990)
- இந்துமக்களுக்கு ஒரு கையேடு : அகில இலங்கை இந்து மாமன்ற பொன்விழா வெளியீடு : கொழும்பு (2006)
- உலக மதங்கள் : சி.வ.இரத்தினசிங்கம்
- சைவநெறி பாடநூல்கள் : கல்வி வெளியீட்டுத்திணைக்களம்
- இந்துப்பண்பாட்டியல் : பேராசான் இலக்கியக் கலாநிதி க.சிவராமலிங்கபிள்ளை அவர்களின் சிந்தனைத் தொகுப்பு : கல்வியியல் வெளியீட்டு நிலையம் : யாழ்ப்பாணம் (2007)
- இந்து நாகரிகம் : பாகம் -1, 2, 3 : க. சொக்கலிங்கம்
- அல்குர் ஆன்
- அல் ஹதீஸ் : புஹாரி முஸ்லீம்
- ஈமானிய ஊற்று, அல் ஹஸனாத் : வாரவெளியீடு
- உயர்தர இஸ்லாமிய நூல்கள்
- பொன்மொழிகளும் பழமொழிகளும் : து. வெரங்கராஜன்
- திருவிவிலியம் : கிறிஸ்தவர்களின் புனித நூல்
- தோழன் : மாத சஞ்சிகை
- மன்னா : மாதபத்திரிகை
- சங்க ஏடுகள்
- விவிலிய விருந்து
- வத்திக்கான் சங்க ஏடு : 1962 - 1965 ஆம் ஆண்டு வத்திக்கானில் பொதுச் சங்கத்தினால் வெளியிடப்பட்டது.
- பாதுகாவலன் : வாரப்பத்திரிகை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியர்கள் பற்றி........

### *திரு. தனஞ்செயன் அருச்சுவன் அவர்கள்*



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 10 ஆம் அணியில் இந்து சமய பாடநெறி முகிழ்நிலை ஆசிரியர் ஆவார். அவர் மட்/எருவில் கண்ணகி ம.வி, மட்/வெல்லாவெளி கலைமகள் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் சிறப்பாகக் கல்வியைக் கற்றுள்ளார். பாடசாலைக் காலத்திலும், எமது கல்லூரியிலும் இந்து சமய செயலாற்றுகைகளில் முன்னின்று உழைப்பவர் தலைமைத்துவப் பயிற்சியும் பெற்ற இவர். நூல்களை வாசிக்கின்ற ஆர்வமும், எழுத்தாற்றலும் உள்ளவர். பல கட்டுரைகளையும், கையெழுத்துச் சஞ்சிகையையும் எழுதிய அனுபவத்தைக் கொண்டுள்ளார். இவர் நவகிரிநகர் வாசிகசாலை வாசகர்கள் வட்டத் தலைவராகவும், பாலையடிவட்டை ஸ்ரீ புளியடி பிள்ளையார் ஆலய நிர்வாகச் செயலாளராகவும், மட்டக்களப்பு சனசமூக செயற்குழு உறுப்பினராகவும், P.P.D.R.O, வேள்ட் விஷன், யுனிசெப், சிறுவர் பாதுகாப்பு ஒன்றியம், போன்ற நிறுவனங்களின் கழகத் தலைவராகவும், மிலேனியம் விளையாட்டுக்கழக உறுப்பினராகவும் இருந்து பல்வேறு வகையான சமூகத் தொண்டுகளையும் செய்து வருகின்றார். அத்துடன் அறநெறிப் பாடசாலை ஆசிரியராகவும், களுவாஞ்சிக்குடி சமூக சீர்திருத்த மாணவர் நிலைய (S.R.S.C) ஆசிரியராகவும் இவர் செயலாற்றுவது இளவயதிலேயே சமயக் கல்வித்துறையிலும், தமிழிலும் இருக்கும் ஆழ்ந்த ஈடுபாட்டைக் காட்டும். திரு.த.அருச்சுவனின் கல்வி, சமயத்துறை ஆற்றலை மெச்சுகின்றேன்.

### *திரு. சிவலிங்கம் துஜியந்தன் அவர்கள்.*



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 10 ஆம் அணி இந்துசமய பாடநெறி முகிழ்நிலை ஆசிரியர் ஆவார். இவர் யா/அனலைதீவு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, யா/அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயம், யா/வைத்தீஸ்வராக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் தனது கல்வியைக் கற்றுள்ளார். இப்பாடசாலைக் காலத்திலும், எமது கல்லூரியிலும் இந்து சமயச் செயலாற்றுகைகள் பலவற்றை முன்னின்று நடத்தியுள்ளமையுடன், கையெழுத்துச் சஞ்சிகையினையும் வெளியிட்ட இவர் பல நூல்களைத் தேடி வாசிக்கும் திறன் கொண்டதோடு கட்டுரைகளை எழுதுவதிலும் மிகுந்த ஈடுபாடுடையவர். இவ்வாறு இவரது திறமைகள் வெளிக்காட்டப்படுவதுடன் விளையாட்டுத் துறையிலும் ஆர்வமுள்ள இவர் யா/அனலைதீவு மனோன்மணி ஆலய நிர்வாக சபை உறுப்பினராகவும், ஐயனார் திருக்கோவில் நிர்வாக உறுப்பினராகவும், அனலைதீவு - 'புலியேந்தி' நாகேஸ்வரன் திருக்கோவில் நிர்வாகசபை உறுப்பினராகவும், அனலைதீவு சனசமூக நிலைய உறுப்பினராகவும் இருந்து ஆன்மீக இந்துமத உயர் விழுமியங்களைப் பறைசாற்றி இளைஞர்களை வலுவூட்டி வருகின்றார். அவரது சேவையைப் பாராட்டுகின்றேன்.

மேற்படி இருவரும் மிகச் சிறந்த முன்மாதிரியான ஆன்மீக செயற்றிட்டத்தை நிறைவேற்றியுள்ளனர். அத்துடன் இந்நூல் இந்து, பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய கருத்துக்களைச் சிறப்பாகக் கொண்டுள்ளது. அத்தோடு கல்லூரியின் கலையரங்கு மண்டப முகப்பில் "**மதசாரம்**" என்ற படத்தையும், அதே படத்தை இந்நூலின் அட்டைப் படமாகவும் உருவகப்படுத்தியுள்ளமை வெகுசிறப்பாக உள்ளது. இவர்கள் இருவரும் தமது ஆன்மீகச் சேவைகளைத் தொடர்ந்து முன்னெடுக்க இறையருளை வேண்டுகின்றேன்.

**பா.தனபாலன்.**
**விரிவுரை இணைப்பாளர்,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,**
**கோப்பாய்.**

kajamugan Printers - Nallur, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org